பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 19 செவ்வாய்க்கிழமை 04.07.2023 கதிர் 235

# நயினாமடு சீனித் தொழிற்சாலை யாருமே குத்தி முறியவேண்டாம்

## எடுத்தெறிந்து செல்வம் எம்.பி கருத்து



வவுனியா,நயினாமடுசீனித்தொழிற்சாலை தொடர்பில் யாரும் குத்தி முறியவேண்டாம்: வவுனியா மக்கள் வேண்டாம் என்றால் திருப்பி அனுப்புறோம்

இவ்வாறு தெரிவித்தார் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன். வவுனியாவில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் செய்தியாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் தெரிவித்ததாவது:

சீனித்தொழிற்சாலை தொடர்பில் 4 ஆவது தடவையாக அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. ஆனாலும அதை நடைமுறைப்படுத்துவதற்கான ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

வவுனியா நயினாமடுவில் சீனித் தொழிற்சாலை அமைப்பது என்ற வடக்கு மாகாணத்துக்குப் பொருத்தமில்லாத அபிவிருத்தித்திட்டத்தைநடைமுறைப்படுத்த முயற்சிப்பது தொடர்பான பிரச்சினை கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாகத் தொடர்கின்றபோதும் அதில் ரெலோ அமைப்பிற்கு நெருக்கமான தொடர்பு இருப்பது அம்பலப்படுத்தப்பட்டபோதும் அமைதியாக இருந்த வந்த ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், திடீரென நேற்று அது குறித்து வாய்திறந்தார்.

இந்தத் திட்டம் குறித்து ஒருவரும் குத்தி முறியத்தேவையில்லைஎன்றுஎடுத்தெறிந்து பேசினார். அது மட்டுமல்ல இந்தத் திட்டம் குறித்து வவுனியா மக்கள் சொல்வதுதான் முடிவு என்று பிரதேசவாதத்தையும் கிண்டிக் கிளறிவிட்டார். அவரது கருத்துக்களும் அதிலுள்ள பச்சைப் பொய்களும் குறித்துப் பின்னர் சொல்கிறேன். அதற்கு முன்னதாக திடீரென்று செல்வம் ஏன் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்து இது பற்றிப் பேச வேண்டி வந்தது என்பதைப் பற்றிச் சொல்லிவிடுகின்றேன்.

பானையின் கீழே அடுப்பில் சூடிருந்தால் பானையின் உள்ளே தண்ணீர் ☞2

## தெற்கில் நேற்றிரவு ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை

தென்னிலங்கையில் ஓட்டோ சாரதி ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பிரதேசத்தில் நேற்றிரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

38 வயதுடைய எஸ்.சஞ்சீவ என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சஞ்சீவ, ஓட்டோவில் தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது மற்றொரு ஓட்டோவில் வந்த இருவர், அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான ☞2

### சீனித் தொழிற்சாலை சிங்களக் குடியேற்றத்தை கொண்டு வரும் என்பது மக்களின் அச்சம்

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் வாக்கு வேண்டுமெனில் வடக்கில் கரும்பு செய்கையை ரணில் கைவிடவேண்டும்

## வலியுறுத்துகின்றார் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிக்க வேண்டுமெனில் அவர் வடக்கில் கரும்புச் செய்கையை மேற்கொண்டு, சீனித் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தைக் கைவிடவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். வவுனியா, நயினாமடுவில் அமையவுள்ள சீனித்தொழிற்சாலை மற்றும் வடக்கில் கரும்புச் செய்கை தொடர்பில் அவரிடம் எழுப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிச்சயமாகஇல்லை!நான் முதலமைச்சராக இருந்த போது வடமாகாணத்தில் சீனி ஆலையைத் திறப்பது குறித்த கேள்வி எழுந்தது. கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்காக வடக்கில் காணிகளை வழங்குவது வடமாகாண மக்களுக்குப் பாதகமாக அமையும் எனத் திட்ட அறிக்கைகள் மற்றும் இணைக்கப்பட்ட தரவுகளை ஆராய்ந்து முடிவெடுத்தோம். நாங்கள் திட்டத்தை ஏற்கவில்லை.

மீண்டும்இந்தவிவகாரம் தற்போது எழுந்துள்ளது.சீனி ஆலை கட்ட 500 ☞2

# ‘செல்பி’ எடுக்க முயன்ற யுவதி நீரில் வீழ்ந்து பரிதாபச் சாவு





அத்தனகலு ஓயாவில் நீராடச் சென்ற 20 வயது யுவதி ’செல்பி’ எடுக்க முயன்றபோது நீரில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, புறக்கோட்டை - குணசிங்கபுர தொடர்மாடி குடியிருப்பு வசித்து வந்த பாத்திமா பஸ்னா என்பவரே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இறந்த யுவதி புறக்கோட்டையில் உள்ள பாடசாலை ஒன்றில் தொண்டராசிரியராகப் பணிபுரிந்தவர் என்று தொடக்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த யுவதியுடன் மேலும் 7 பேர் ☞2

# போலித் தர்க்கங்களை முன்வைப்பதை விடுத்து நாட்டை முன்னேற்றுவதற்கு ஒன்றிணையுங்கள்

## எதிர்கட்சி தலைவருக்கு ஜனாதிபதி ரணில் பகிரங்க அழைப்பு

போலியான தர்க்கங்களை முன்வைத்து தோல்வியைத் தழுவிக் கொள்வதற்கு மாறாக நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த ஆட்சியுடன்இணைந்துகொள்ளுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கட்சித் தலைவர் தலைமையிலான முழு எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் அரசியல்வாழ்க்கையில்32வருடங்கள்பூர்த்தியாவதைமுன்னிட்டு அம்பாந்தோட்டைமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நேற்று அம்பாந்தோட்டை மாகம்ருஹூனுமண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ’அமரவிரு அபிமன் 32’ நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரரிவித்ததாவது:

தனது 32 வருட அரசியல் வாழ்வில் 28 வருடங்களைநாடாளுமன்ற அங்கத்துவத்துடன் கழித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர, மக்களுக்கு சிறப்பான சேவைகள் பலவற்றைச் செய்துள்ளார். இவர் ஆளும் மற்றும் எதிர்கட்சி அரசியல் ☞2

# அஸ்வெசுமவில் பாதிக்கப்பட்ட அனைவர் சார்பிலுமே வழக்கு

## பொது ஜன பெரமுன எம்பி அறிவிப்பு

அஸ்வெசும திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ள அனைவரின்சார்பிலும்விரைல்சட்ட நடிவடிக்கை எடுக்கப்படும் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று நடைபெற்ற அஸ்வெசம திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுடனான சந்திப்பின் போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அஸ்வெசும திட்டத்துடன் சமுர்த்தி உத்தியோகத்தர்களோ அல்லது கிராம சேவர்களோ தொடர்புபடவில்லை. அவர்களே மக்களுடன் நெருங்கிய தொடர்புகளைக்கொண்டவர்களாக உள்ளனர்.

அவ்வாறு இருக் ☞2

# புதிய பணிப்பாளர் நியமனம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராக டகாஃபுமி கடொனோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும்ஆசிய அபிவிருத்தி வங்கி யின் இலங்கைக்கான பணிப்பாளராகப் பணியாற்றிய சென் செனின் பதவிக்காலம் கடந்த ஜூன் 30 முடிவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில் அப்பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளடகாஃபுமிகடொனோ, ’சர்வதேசநாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்குஅமைவாக இலங்கைஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புநடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்பை ஆசிய ☞2

# அபிவிருத்தியை தரக்கூடியவர் தானே என்பதை நிரூபித்துள்ளவர் ரணில்தான்

## விவசாய அமைச்சரின் கருத்து இது

நாட்டில் அபிவிருத்தியைச்செய்யக்கூடியதலைவர் தானே என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிரூபித்துள்ளார் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர, தெரிவித்தார்.

தனதுஅரசியல் வாழ்க்கைக்கு 32வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டுஅம்பாந்தோட்டை மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக நேற்று அம்பாந்தோட்டை மாகம் ருஹூனு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ’அமரவிரு அபிமன் 32’ நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எவரும்நாட்டைபொறுப்பேற்காமல் இருந்த சவாலான சூழலில்தற்போதைய ஜனாதிபதியேநாட்டைப்பொறுப்பேற்க முன்வந்தார். வரிசைகளில் மக்கள் உயிரை விட்டனர், உரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. எவராலும்நாட்டைமீட்க முடியாதென பலரும் கூறிய காலமது.

இருப்பினும் நாட்டிற்காக அந்தச் சவாலை பொறுப்பேற்றத் தலைவருக்கு அதனை வெற்றிகொள்ள அனைவரும் உதவவேண்டும். அந்த நோக்கிலேயே விவசாய அமைச்சைபொறுப்பேற்றுக்கொண்டேன். எவ்வாறாயினும் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழான வேலைத்திட்டங்கள் ☞2

# உள்நாட்டில் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டால் உலகமெங்குமிருந்தும் முதலீட்டாளர்கள் வருவார்கள்

## இப்படி நம்புகின்றார் அயலுறவு அமைச்சர் அலி சப்ரி

முதலீட்டுக்குச்சாதகமான சூழலை உருவாக்கிக்கொடுக்கும் வகையில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளும்பட்சத்தில்இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று அயலுறவு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

’ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

’கடந்த காலத்தில் இலங்கையில் பணவீக்கம் 80சதவீதமாகக் காணப்பட்டது. நாடு என்ற வகையில் அது மிகவும் கடினமாக நிலைமையாகும். அந்த நேரத்தில் ரூபாவின் பெறுமதியும் பெருமளவில் வீழ்ச்சி கண்டது. 2 மில்லியனின் பெறுமதி 1.2 மில்லியனாகச் சரிவடைந்தது.

இவ்வருடத்தில் லெபனானின் பணவீக்கம் 48.5 சதவீதமாகும் வெனிசுலாவின பணவீக்கம் 28.5 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இலங்கையின் பணவீக்கம்12சதவீதமாகவே காணப்படுகின்றது. அடுத்த மாதமளவில் 7முதல் 8 சதவீதமாக அது குறையும் என நம்புகிறோம். தவறான பொருளாதார முகாமைத்துவச் செயற்பாடுகளை தடுத்துள்ளோம். லெபனானில் இன்றும் மின் வெட்டு அமுல் படுத்தப்படுகிறது. இந்த நிலை இலங்கையில் இல்லை.

பாதாளத்தில் விழுவதற்குத் தயார் நிலையிலிருந்த பொருளாதாரமே எமக்கு கிடைத்தது. அதனைத்தடுக்க முற்படாமல்இருப்பதேபெரும் பாதிப்பாகும். அதனைத்தடுக்க நாம்பலமுயற்சிகளை ☞11

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் பல குறைகள் என்கிறார் கப்ரால்

நாடாளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்ட கடன்மறுசீரமைப்பு தீர்மானத்தில் பல குறைபாடுகள் காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின்முன்னாள்ஆளுநர் அஜித்நிவாட் கப்ரால்தெரிவித்துள்ளார்.

கொழும்பில்அவர்நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பின்போதே மேற்கண்டவாறுதெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமமாகநடத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டாலும் அவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. உதாரணமாக, ☞2

# உள்நாட்டு கடன் மறுசீரமைப்பால் விரைவில் பல நெருக்கடிகள் வரும்

## ஹர்ஷ டி சில்வா எம்.பி. எதிர்வுகூறல்

உள்நாட்டுக்கடன்மறுசீரமைப்புக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்ற நிலையில், இனி அனைத்தும் ஜனாதிபதியின் கைகளுக்கு எட்டிவிட்டது. இதனால் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.என்று ஐக்கிய மக்கள் மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

.தேசியகடன்மறுசீரமைப்புக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்துள்ளது. அதனால் நாளை செவ்வாய்க்கிழமையில் இருந்து சில வங்கிகளில் பங்குகளின் விலை அதிகரிக்கும் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொதிக்கத்தானே செய்யும். அதுபோலவேரெலோவுக்குள் இந்தத் திட்டம் குறித்து கட்சித் தலைமைக்கு எதிராகக் கடும் கொந்தளிப்பு எழுந்ததைத் தொடர்ந்தும், தலைமை நேர்மையாகச் செயற்படுகின்றது என்றால் ஏன் அதனைப்பகிரங்கமாகமக்கள் முன்வைக்க முடியவில்லை என்று கட்சி உறுப்பினர்கள் தலைவரையும் கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமியையும் பார்த்துக் கேளாக் கேள்விகளைக் கேட்டதன் விளைவே செல்வத்தாரின் "குத்தி முறிய வேண்டாம்" என்கிற வெறுப்புப் பேச்சு. கட்சிக்குள் சூட்டைத் தாங்க முடியாத செல்வத்தார் அந்தக் கொந்தளிப்பை, சூட்டை வெளியே மக்களிடம் காட்டத் தலைப்பட்டார்.

அப்படி என்னதான் கட்சிக்குள் நடந்தது?

ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமைஇரவுசூம்செயலிஊடாக நடைபெற்றது. ஏற்கனவே கட்சிக்குள் தலைமைக்குச் சவாலான தரப்பாக இருக்கும்கிழக்குமாகாணநாடாளுமன்றஉறுப்பினர்கோவிந்தன் கருணாகரம்(ஜனா)தரப்பினர் செல்வத்தையும்சுரேனையும் கழுத்தைத் திருகாத குறையாக இந்த சீனித் தொழிற்சாலை விடயத்தில் கேள்விக் கணைகளால் துளைத்தனர். ஜனா கட்சியின் செயலாளரும்கூட. கூட்டத்தில் சுரேன் குருசாமி, இந்திரகுமார் பிரசன்னா, சபா குகதாஸ், விந்தன்கனகரட்ணம், கணேசலிங்கம் சொக்கன், நித்தியானந்தன், கமலராஜன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சீனித் தொழிற்சாலை அமைப்பது தொடர்பான விவகாரம் கட்சியின் முன்மொழிவு அல்லாத போதும், அது தலைவர் செல்வத்தினதும் பேச்சாளர் சுரேனினதும் முயற்சிகள் என்றபோதும் அதனால் ஏற்பட்டுள்ள கெட்ட பெயர் ஒட்டுமொத்தக் கட்சியையும் பாதிக்கின்றது என்று ஜனா தரப்பினர் சாடினர். தமிழ் மக்களுக்கும் மண்ணுக்கும்எதிராகரெலோ செயற்படுவதாக விமர்சிக்கப்படுவதாகச் சீறினார்கள்.

நாடாளுமன்றத்தில் தன்னைப் பார்த்த ஜனாதிபதி ரணில் கூறியவிடயத்தையும் சீனித் தொழிற்சாலை விடயத்துடன் தொடர்படுத்திப் பேசிய ஜனா, கட்சிக்குள் என்னதான் நடக்கின்றது என்று கேள்வி எழுப்பினார்.

ஜனாவைப் பார்த்து "உங்களுடைய எல்லா விடயங்களும் சரிதான்" என்று ரணில் கூறிவிட்டுச் சென்றாராம். அவர் குறிப்பிட்ட விடயம் என்னவென்று தனக்கு விளங்கவேயில்லை என்று குறிப்பிட்ட ஜனா, ரணில் இந்தத் திட்டத்தைத்தான் அப்படிக் கூறியிருக்கக்கூடும் என்று அர்த்தப்படுத்தும் வகையில் தெரிவித்தார்.

விவகாரம் கடும் சூடு பிடிக்கத் தொடங்கியதை அடுத்து சுரேன் தலையைக் கொடுத்தார். வழக்கமாக அவர் தெரிவித்துவரும் கதையையே கட்சிக்குள்ளும் மீண்டும் ஒரு தடவை கட்டவிழ்த்து விட்டார். இந்தத் திட்டம் தாய்லாந்துப் பிரதமர் இலங்கைக்குவந்தபோது முன்மொழியப்பட்டது என்றும் இந்தத் திட்டத்தை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரும் அப்போதை வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனும்கூட வரவேற்றனர் என்றும் ஏற்கனவே 3 தடவைகள் இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த போதும் அது நடைமுறைக்கு வரவில்லை என்றும் கூறினார்.

இந்தத் திட்டம் வந்தால் 3 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும்என்றார். ஆனால்,திட்டம்குறித்துரணில் முன்வைத்தஅமைச்சரவைப் பத்திரத்திலேயே1050பேருக்கு வேலைவாய்ப்பு என்றே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதையெல்லாம் ஜனா தரப்பு 'செக்' பண்ணியா பார்க்கப் போகின்றது என்று நினைத்தாரோ என்னவோ 3000 வேலை வாய்ப்பு என்றுசுரேன்அடித்துவிட்டார். இதற்கு முன்னர் கட்சியின் சர்வதேசத் தொடர்பாளர் 30 ஆயிரம் நேரடி வேலை வாய்ப்புக்கிடைக்கும்என்றார். இவர் ஒரு சைபரைக் கட் பண்ணிவிட்டார்.

தொழிற்சாலைஅமைந்தால் அதில் பெண் தலைமைத்து வக்குடும்பத்தினர், முன்னாள் போராளிகள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அதுவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோரின் சிபாரிசின் அடிப்படையில் அந்த வேலைகள் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் மேலும் அடித்துவிட்டார். (தனியார் நிறுவனம் வந்த பின்னர் இதுவெல்லாம்வெறும்கானல் வாக்குறுதிகளாகிவிடும், திறன்சார் தொழிலாளர்களை மட்டுமேநிறுவனம்உள்ளீர்க்கும் என்பது உலகம் முழுக்க உள்ள நடைமுறை)

ஜனா தரப்பு இந்தியத் தரப்பினர் இந்தத் திட்டத்திற்கும் சீனாவிற்கும் தொடர்பிருப்பதாக நம்புவதாகத் தெரிவதைப் பற்றியும் பிரச்சினை எடுத்தனர். அத்தோடு, இந்தத் திட்டத் திற்கும் ரெலோவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, இது செல்வத்தினதும் சுரேனினதும் முயற்சி மட்டுமே என்பதைத் தான் இந்தியத் தூதரக அதிகாரிகளைச் சந்திக்கும்போது விளக்குவார் என்றும் கூட்டத்தில் தெரிவித்தார்.

விவகாரம் சிக்கலாவதை உணர்ந்த சுரேன் உடனேயே, இந்திய இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பில்லை என்றும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்த பின்னர் இந்திய தூதரகப் பொருளாதாரம் தொடர்பான அதிகாரி ஒரு சூம் கூட்டத்தில் இந்தியா இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பில்லை என்று குறிப்பிட்டார் என்றுதெரிவித்தார். (சம்பந்தர் சீனித் தொழிற்சாலை கேட்டார் என்ற கதை மாதிரித்தான் இதுவுமோ என்பதை இனித்தான் உறுதிப்படுத்தவேண்டும்)

அப்படியென்றால் இந்தத் திட்டத்தால் மகாவலி வடக்கிற்கு வரப்போகின்றது, சிங்களக் குடியேற்றங்கள் நடக்கப்போகின்றன என்கிற விமர்சனங்கள் வந்தபோது ஏன் அமைதியாக இருந்தீர்கள், இது பற்றி மக்களிடம் பகிரங்கமாகச் சொல்லியிருக்க வேண்டியதுதானே என்று ஜனாஅங்குஒருகேள்வியைத் தூக்கிப்போட்டார்.

அதற்கு சீனித் தொழிற்சாலையில் முதலிடப்போகும் நிறுவனத்தின் அனுமதி இன்றித் தன்னால் பகிரங்கமாகப்பேசமுடியாதுஎன்றும் நேரம்வரும்போதுதான் அது குறித்துப் பேசுவார் என்றும் தெரிவித்தார்.

நேற்று நடந்த கூட்டத்தில் தலைவர் செல்வமோ இந்தத் திட்டத்திற்கும் ரெலோவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, தெற்குக்குப் போகும் ஒரு அபிவிருத்தித் திட்டத்தை வவுனியாவுக்குக் கொண்டு வரப் பார்க்கின்றோம் என்கிறார். ஆனால் கட்சியின் பேச்சாளரோ சீனித் தொழிற்சாலை முதலீட்டாளர்களைக் கேட்காமல் இது தொடர்பான கட்சியின் நிலைப்பாட்டை மக்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவிக்க முடியாது என்கிறார். கட்சியின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களையேஇப்படித்தலையைச் சுற்றமுடியும் என்றால் மக்களின் நிலையை எண்ணிப் பரிதாபப்படத்தான் முடிகிறது.

தலைமைக் குழுக் கூட்டத்தில் சுரேன் கூறிய விளக்கங்களிலேயே 'ஹைலைட்' ஒன்றுண்டு. அது என்னவென்றால், சீனித் தொழிற்சாலை பற்றிய விடயத்தை சுமந்திரனின் பின்னணியில் இயங்கும் பத்திரிகைதான் எழுதுகின்றது என்றும் தன்னிடம் உள்ள தனிப்பட்ட பகை காரணமாக இவ்வாறு எழுதுவதாகவும் சொன்னார் அவர்.

சீனித்தொழிற்சாலைபற்றிய இரகசியக்கூட்டங்கள்பற்றிய செய்திகளை காலைக்கதிர் வெளியிட்டபோது அது குறித்து அவரிடமே நேரில் கேட்டுத்தான் செய்தி வெளியிடப்பட்டது. தனக்கு அது பற்றி எதுவுமே தெரியாது என்று அப்போது சொன்னவர் சுரேன். பின்னர் இது விடயத்தில் தொடர்ந்து பல உண்மைகளை காலைக்கதிர் வெளிப்படுத்தியபோது, அது பற்றிக் கேட்டவர்களிடம் அதுவொருமஞ்சள்பத்திரிகை என்றுவிளக்கம்சொன்னவர் அவர். அமைச்சரவையில் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு, இதற்கு மேலும் மறைக்கமுடியாதபடி இந்த விடயம் அம்பலத்திற்கு வந்ததும் இப்போது சுமந்திரனின் பின்னணிப் பத்திரிகை என்று 'பிளேட்டை' மாற்றிப் போட்டிருக்கிறார்.

அதுவும் போதாது என்று தன் மீதான தனிப்பட்ட பகை காரணமாக காலைக்கதிர் எழுதுவதாகவும் கூறியிருக்கிறார். தனிப்பட்ட பகை பாராட்ட இவர் காலைக்கதிருக்கு என்ன மாமனா மச்சானா? காலைக்கதிர் இவரது தனிப்பட்ட விவகாரங்கள் எதனையாவது இதுவரையில் எழுதியிருக்கிறதா, தனிப்பட்ட பகை என்று சொல்ல? அவருக்கும் காணி மோசடிக்கும் உள்ள தொடர்புகளை அம்பலப் படுத்தியிருக்கிறது. அது நீதிமன்றவழக்கோடு தொடர்புபட்டது. உரிய ஆவணங்களைப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே அதைக்கூட வெளியிட்டது. சீனித் தொழிற்சாலை விடயத்தில் காலைக்கதிர் பொது நலன் கருதியே இதுவரையில் செய்திகளை வெளியிட்டு வருகின்றது. ரெலோவின்அரசியல்நிலைப்பாட்டுக்கும் அதன் செயற்பாட்டுக்கும் இடையிலான முரண்பாட்டையே அம்பலப் படுத்தி வருகின்றது. இதில் சுரேனுடன் தனிப்பட்ட பகை என்ன இருக்கிறது?

இந்தப் பத்தி இன்று நீண்டு கொண்டே போவதாலும், இது பற்றி சொல்வதற்கு இன்னும்நிறையவிடயங்கள் இருப்பதாலும் இத்தோடு இதனை நிறுத்திக்கொண்டு நாளை மிகுதியைச் சொல்கின்றேன் வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## அஸ்வெசுமவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றநிலையில்அவர்களைச் சம்பந்தப்படுத்தாது பிறிதொரு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை ஏற்றுக்கொள்வது பொருத்தமற்றது.

அரச அதிகாரிகளும் ஏனைய சிலரும்தான் இந்தத்திட்டத்தினை முன்னர்த்துள்ளார்கள். ஆகவே அவர்கள் தமது தவறுகளைப் பொறுப்பேற்க வேண்டியது கட்டாயமாகின்றது - என்றார்.

## அபிவிருத்தியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளைச்சல்நிலங்களிலிருந்து விலகிச்சென்றவிவசாயிகளை மீளவும்விவசாயநிலங்களை நோக்கி வரச் செய்துள்ளது.

மக்களுக்கு உரங்களை பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த போகத்தின்போது மூன்று வகை உரங்களும் உரிய நேரத்தில்பகிர்ந்தளிக்கப்படும். அதனால் அனைத்துப் பகுதிகளிலும் பெருமளவிலானவிளைச்சலைப்பெற்றுக் கொள்ள முடியும். அதேபோல் விவசாய நவீனமயப்படுத்தலுக்கு அவசியமானவேலைத்திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன. அதனால் குறுகிய காலத்தில் நாட்டின் விவசாயத்துறை புத்துயிர் பெறும்.

சில காலங்களுக்கு முன்பு மக்கள் நாடாளுமன்றத்தின் 225 பேரையும் புறக்கணித்தனர். நாடாளுமன்ற வீதிகளில் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டது. இன்று பலருக்கும் அந்த நிலைமை மறந்துபோயுள்ளது. அவ்வாறான நிலைமை மீண்டும் நாட்டிற்குள் உருவாகாமல் இருப்பதற்குஅனைவரும்ஒத்துழைக்க வேண்டும்.

ஒரு வருடத்திற்குள் நாட்டை இந்த நிலைமைக்கு கொண்டுவர முடியும் எனக் காண்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தானே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய தலைவர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார் என்றார்.

## நயினாமடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை. நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. முதலீட்டாளர்கள் இன்னும் தமது கருத்துக்களைச் சொல்லவில்லை. அதற்கு முன்பாகவே பலர் குத்திமுறிகிறார்கள். சிங்கள குடியேற்றம் வரும் எனவும், சீனா முதலீடு எனவும் கூறுகிறார்கள்.

ரெலோ சீனாவின் முதலீட்டை அதாவது இந்தியாவுக்கு எதிரான முதலீட்டை ஏற்க மாட்டாது. இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சீனா முதலீட்டை எதிர்போம். நாம் ஒரு போராட்ட இயக்கம். நிச்சயமாக சிங்கள குடியேற்றங்களையும் எதிர்ப்போம்.

சீனித் தொழிற்சாலை முறையாக நடைமுறைப் படுத்தப்படாதநிலையிலேயே பலபேர் குத்தி முறிகிறார்கள். வவுனியா மக்களோ அல்லது வவுனியாவில் உள்ள அரசியல்வாதிகளோ இது தொடர்பில் கருத்துச் சொல்லவில்லை. வவுனியாவிற்கு வரும் முதலீடு என்ற அடிப்படையில் எங்களது மக்களின் கருத்துக்களையும், இங்குள்ள அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள், தலைவர்கள் ஆகியோரது கருத்துக்களையும் பெற்ற பின்தான் முடிவெடுப்போம்.

சீனித் தொழிற்சாலையால் சிங்கள குடியேற்றம் வரும். சீனா வரும் என நிரூப்பிக்க முடிந்தால் நிரூப்பிக்கவும். அதைவிடுத்து சும்மா குத்திமுறிவதில் அர்த்தமில்லை.

இந்தத் தொழிற்சாலை தாய்லாந்து நிறுவனமே முதலீடு செய்கிறது. இதில் ரெலோ எந்தப் பங்காளியும் இல்லை. இது வவுனியாவுக்கு முதலீட்டாளர்களைக் கொண்டு வருவதற்கான ஒரு செயற்பாடே தவிர நாம் அதில் பங்காளர்கள் இல்லை. மக்களின் நலன், விவசாயிகளின் நலன் மீது கவனம் செலுத்தி வவுனியா மக்களோடு கலந்தாலோசித்து எமது கருத்தை சொல்ல இருகின்றோம். வவுனியா மக்கள் விரும்பவில்லை என்றால் சிங்கள இடத்திற்கு போகட்டும். மக்கள் அபிப்பிராயம் பெற்றுத்தான் நாம் முடிவெடுப்போம்.

எங்களைப் பொறுத்தவரை எமது தேசத்தில் முதலீடுகள்நடைபெறவேண்டும். ஆகவேஇதில்முதலீட்டை பார்ப்பதைவிட்டுவிட்டு கனவுகளோடு பார்க்க வேண்டாம்.

ஆதாரம் இல்லாத கருத்துக்களை கூற வேண்டாம். இதைப் பற்றி யாரும் குத்தி முறிய வேண்டாம் - என்றார். (100)

## தெற்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஞ்சீவ சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலத்தை வைத்திய சாலையில் ஒப்படைத்த பொலிஸார், கொலையாளிகளைத்தேடிவருகின்றனர். (02)

## உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஷ்சேரியின் பிணை முறிப் பத்திரம் மத்திய வங்கிக்கு உரித்தாக இருக்கும் போது, நடைமுறையில் அது வேறுவிதமாகக் காணப் படுகின்றது.

இதேபோன்ற நிலைமையானது நீடிக்கு மாக இருந்தால் உள்நாட்டுக்கடன் வழங்குநர்களில் சமத்துவத்தினைப் பேணுவது மிகக் கடினமானதாக இருக்கும். அதேநேரம், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் பல உள்ளன.

துறைமுகம் உள்ளிட்ட பகுதிகளில் பணியாற்றுபவர்களாலேயே 35 சதவீதம் வரையில் ஊழியர் சேம இலாப நிதி வழங்கப்படுகின்றது. அவ்வாறு இருக்கையில் உள்நாட்டில் உள்ள ஊழியர் சேமலாப நிதிக்குவட்டி வீதம் 9 சதவீதமாக்கப்பட்டுள்ளது. ஆகவே தேசிய கடன் மறுசீரமைப்பு விடயத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் நீக்கப்படவேண்டும். அதன்மூலமாகவேஅச்செயற்பாட்டினை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் - என்றார்.

## 'செல்பி' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீராடச் சென்றிருந்தனர் என்றும், அவர் 'செல்பி' எடுக்க முயன்ற போது பாறையிலிருந்து விழுந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீழ்ந்ததும் தனக்கு நீச்சல் தெரியாது என்று அவர் கூச்சலிட்டார், நீரில் அடித்துச் செல்லப்பட்டவர் அவரது சடலத்தையே மீட்க முடிந்துத என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.. (02)

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி வங்கி வழங்கும். அதேவேளை அந்த ஒத்துழைப்பு மூலம் இலங்கை மக்கள் பயனடைவது உறுதிப்படுத்தப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியில் 2006ஆம் ஆண்டுஇணைந்துகொண்ட டகாஃபுமிகடொனோ, மேற்கு, தென்கிழக்காசிய மற்றும் மத்தியபிராந்தியங்களிலுள்ள ஆசியஅபிவிருத்திவங்கியின் கிளை அலுவலகங்களில் பணியாற்றியுள்ளார்.

## ஹர்ஷ டி சில்வா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் பிணைமுறி இருக்கும் நூற்றுக்கு 25, 30 வட்டி பெறுபவர்கள் அதிக லாபம் பெறுவார்கள்.

அடுத்தபடியாக அரசாங்கத்தின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு இணக்கம் தெரிவிப்பதா இல்லையா என ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக எதிர்வரும் 21நாட்களுக்குள் தீர்மானிக்க வேண்டி இருக்கிறது.

அதன் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியம் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்தால், ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 2025ஆம் ஆண்டுவரை நூற்றுக்கு 12சதவீத வட்டியும் அதன் பின்னர் நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழங்க முயற்சிப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயார் இல்லை. ஏனெனில் இதனை சட்ட ரீதியில் வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டியேயேநாங்கள் இருக்கிறோம்.

அத்துடன்அரசாங்கத்தின் தேசிய கடன் மறுசீரமைப்பின் சுமையையும் ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதே சுமத்தி இருக்கிறது. அதனையே நாங்கள் எதிர்க்கிறோம். இந்த சுமை வங்கி உரிமையாளர்கள், செல்வந்தர்கள் என அனைவருக்கும் பிரிந்து செல்லும் வகையில் மேற்கொண்டிருந்தால் அதில் நியாயம் இருக்கிறது.

அதனால்அரசாங்கத்தின் தேசியகடன்மறுசீரமைப்பின் சுமையை முழுமையாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் மீது மாத்திரம் சுமத்தி இருப்பதையே நாங்கள் எதிர்க்கிறோம். அதனாலே அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிரத்து வாக்களித்தோம் - என்றார்.

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏக்கரும் 72 ஆயிரம் ஏக்கர் நிலம் கரும்புச் சாகுபடிக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

கரும்பு வளர்ச்சிக்கு நிறையத் தண்ணீர் தேவை. கரும்பு ஒரு நீண்ட காலப் பயிராக (பதினெட்டு மாதப் பயிர்) அதிக அளவு உயிர்ப் பொருளை உற்பத்தி செய்கிறது, (உயிர்ப்பொருள், ஆற்றல் உற்பத்தியின் பின்னணியில், உயிரி ஆற்றல் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் சமீபகால உயிரினங்களின் பொருள் ஆகும். உதாரணமாக மரம், மர எச்சங்கள், ஆற்றல் பயிர்கள் ஆகியவை அடங்கும். , வைக்கோல் உள்ளிட்ட விவசாய எச்சங்கள், தொழிற்சாலை மற்றும் வீடுகளில் இருந்து வரும் கரிமக் கழிவுகள்) அதிக அளவு தண்ணீர் தேவைப்படுகிறது. இது பெரும்பாலும் நீர்ப்பாசன பயிராக வளர்க்கப்படுகிறது.

கரும்புக்கான நீர்த் தேவை ஒரு ஹெக்டேருக்கு ஆண்டுக்கு 2000 முதல் 3000 மிமீ வரை மாறுபடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பற்றாக்குறை ஈரப்பதம் கரும்பு விளைச்சல் மற்றும் சாறு தரத்தை பாதிக்கிறது, இதனால் பல பூச்சிகளின் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

வடக்கு உலர் மண்டல பகுதியில் எப்போதும் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. வடமாகாணத்தில் உள்ள நிலப்பரப்பு, காலநிலை மற்றும் நீர் வளங்களுக்கு பொருத்தமான திட்டத்தை தெரிவு செய்வதற்குப் பதிலாக வடமாகாணத்தில் உள்ளமது நீர்வளத்தை வெளியேற்றும் பெரும் திட்டத்தை ஜனாதிபதி ஏன் பரிந்துரைக்கிறார்? இந்தத் திட்டம் இதுவரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதியால் வெளிப்படையாகப் பேசப்படவில்லை. இந்த மௌனத்திற்குஏதோகாரணம் இருக்கின்றது. இந்தத் திட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் தாய்லாந்தைச் சேர்ந்த நிறுவனமாக இருந்தாலும் சீனர்கள் என்றே தோன்றுகிறது.

வவுனியா, செட்டிக்குளம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து எடுக்கப்படும் நிலங்கள் இந்த மாபெரும் திட்டத்திற்கான நிலப்பரப்பை உள்ளடக்கும். வடக்கை நாட்டின் தானியக் களஞ்சியமாக மாற்றுவேன் என ஜனாதிபதி முன்னர் கூறினார். தண்ணீர் பஞ்சம் உள்ள வடமாநிலங்களில் இருந்து இவ்வளவு தண்ணீர் கரும்பு சாகுபடிக்கு எடுக்கப்பட்டால் அது எப்படி சாத்தியமாகும்?

ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்கு 450 முதல் 700 மில்லி லிற்றர் தண்ணீர் தேவை என்று அறிவியல்பூர்வமாக மதிப்பிடப்பட்டுள்ளது. கரும்புக்கு 1800 முதல் 2000 மில்லி லிற்றர் தேவைப்படும். ஒரு கிலோ கரும்புசாகுபடிக்கு 210லிற்றர் தண்ணீர்தேவை. ஒருகிலோ சீனி தயாரிக்க 1780 லிற்றர் தண்ணீர் தேவை.

வவுனியா மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில்ஏற்கனவே குடிதண்ணீர்ப் பிரச்சினை உள்ளது. வவுனியா மாவட்டம் அதனை அண்டிய மாவட்டங்களும் பெரிய குளங்களும் ஆறுகளும்இல்லாதபிரதேசங்கள். கரும்புச் செய்கைக்கு இவ்வளவு நீரை எவ்வாறு பெறப் போகிறோம்? நிலத்தடி நீரை உறிஞ்சினால் இப்பகுதி விரைவில் பாலைவனமாக மாறிவிடும். கரும்பு சாகுபடி தொடங்கியவுடன், மற்ற அனைத்துப் பயிர்களும் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும். ஈர மண்டலத்தைப் போலன்றி, உலர் மண்டலத்தில் நீர் ஆவியாதல் அதிகமாக உள்ளது. எனவே, சொட்டு நீர் பாசனத்தை நாடினாலும், வறண்ட பகுதிகளில் அதிக தண்ணீர் தேவைப்படுகிறது.

இந்தத்திட்டத்தால்கண்டிப்பாக இந்த மாவட்டங்களின் இயற்கை சூழல் மிகப்பெரிய எதிர்மறை மாற்றங்களுக்கு உள்ளாகும். தென்னை, நெல், மற்ற பயிர்களுக்கு தண்ணீர் கிடைப்பதில் பாதிப்பு ஏற்படும்.

இன்னொரு பிரச்சினையும் எதிர்பார்க்கப் படுகிறது. யானைகளுக்கு கரும்பு மிகவும் பிடிக்கும். பயிர்கள் அறுவடைக்குத் தயாரானதும், யானைகளின் பெரும் கூட்டத்தை அந்தப் பகுதிகளுக்கு அழைப்பது உறுதி. இந்த திட்டம் செயல்பட்டால் யானைகளைப்பாதுகாப்பதும் பெரும் பிரச்சினையாக இருக்கும்.

இது விரைவில் வடக்கில் பெரும் சிங்களக் குடியேற்றத்திற்கு முன்னோடியாக அமையும் என வடக்கு மக்கள் அஞ்சுகின்றனர். ஏற்கனவே மகாவலி திட்டம் என்ற பெயரில் பெரும் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றுள்ளது. அது இன்னும்தொடர்கிறது. இன்று வரை மகாவலியில் இருந்து ஒருசொட்டுநீர்கூட வடக்கிற்கு கொண்டு வரப்படவில்லை. எமது பொறியியலாளர்களின் கூற்றுப்படி நான் முதலமைச்சராக இருந்தபோது பல்வேறு காரணங்களுக்காக மகாவலி நீர் வடக்கிற்கு வரவே இல்லை.

குதிரைக்கு முன் கேரட்டைத் தொங்கவிடுவது போல, மகாவலித் திட்டம் வடக்கு மக்களின் முன் தொங்கவிடப்படும், அதே சமயம் சிங்களக்குடியேற்றம் வடக்கு, கிழக்கின் சனத்தொகையை மாற்றுவதற்கும், வடக்கு, கிழக்கின் எல்லைக்குள் எதிர்மறையாக ஊடுருவுவதற்கும் வெளிப்படையாகவே நடக்கும். மகாவலி திட்டம்தேசியவிகிதத்தில்குடியேற்றவாசிகளைத் தேர்ந்தெடுக்க வலியுறுத்தும் ஒரு சூழ்ச்சியாகும். இது வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தெற்கிலிருந்து சிங்களக் குடியேற்றங்களைக் கொண்டுவரும் உரிமையை சிங்கள மேலாதிக்க ஆட்சியாளர்களுக்கு வழங்குகிறது.

சர்வதேச சட்டத்தின்படி குடியேற்றப்படுவதற்கான தெரிவில் அப்பகுதி மக்கள் முன்னுரிமை பெறவேண்டும். ஆனால்சிங்கள ஆதிக்கத்தில் உள்ள இலங்கை, தேசிய விகிதாச்சாரத்தின் அடிப்படையில் தமிழர் பகுதிகளில் சிங்களர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு மகாவலிச் சட்டத்தின் அடிப்படையில் சட்டங்களை இயற்றியுள்ளது. தேசிய விகிதம் கூடப் பின்பற்றப்படவில்லை. சிங்களவர்கள் மட்டுமே பாரம்பரியமாக தமிழ்பேசும் பகுதிகளில் வசிக்க விரும்பப்பட்டு தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள். சிறுபான்மையினர் புறக்கணிக்கப் படுகிறார்கள்.

எனவே கரும்புத் திட்டம் என்பது தமிழர்களின் பாரம்பரியமாகத் தமிழ்பேசும் தாயகத்தின் சனத்தொகை உள்ளடக்கத்தை சீர்குலைக்கும் வகையில் தென்னிலங்கையில் இருந்து சிங்களத் தொழிலாளர்களை வரவழைப்பதற்கு வசதியான சூழ்ச்சியாக இருக்கும்.

இவ்வாறு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட கரும்புத்திட்டம் எதிர்காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழர்களின் நலனைப் பெரிதும் பாதிக்கும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தமக்கு வாக்களிக்க வேண்டுமெனில் ஜனாதிபதி இந்த திட்டத்தை கைவிட வேண்டும்.

## உள்நாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களம் தொடர்பிலான அனுபவங்கள் நிறைந்தவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்திருந்தது.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்திலும் அனைவரும் ஒன்றிணைந்துச்செயற்படவேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தியிருந்தேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2022 ஆம் ஆண்டில் அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்களைஜனாதிபதிமாளிகைக்கு அழைத்திருந்தார். இறுதியில் ஐக்கியமக்கள்சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அந்தச்சந்திப்பைபுறக்கணித்திருந்தன.

நானும், ஆர். சம்பந்தனும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்தோம். எவ்வாறாயினும் மே 09 நிகழ்வின் பின்னர் நாம் அனைவரையும் ஒன்றிணைக்கமுற்பட்டோம்.

பிரதமர் பதவியைப் பொறுப்பேற்காவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி எங்களுடைய வேலைத்திட்டங்களுடன் இணைந்துகொள்ளுமென எதிர்பார்த்தபோதும் அது நடக்கவில்லை. அதன் பின்பேதற்போதைய ஆளும் தரப்பை கட்டமைத்து எமது

தொடர்ச்சி 11 ம் பக்கம்

# டயகமவில் புதிதாக மதுபானசாலை; பொங்கியெழுந்தனர் பொது மக்கள்





டயகம நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 16 தோட்டங்களைச் சேர்ந்த 500 இற்கும் அதிகமானோர் வீதிக்கிறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டயகமநகரில்மூன்றுமதுபானசாலைகள் இயங்கிக்கொண்டிருக்கும்இந்தவேளையில் நான்காவதாக ஒரு மதுபானசாலை ஆரம்பிக்கப்படுவது அநாவசியமான ஒன்று என்றும் இது, பிரதேச மக்களை பள்ளத்தில் தள்ளுவதற்கான செயற்திட்டம் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்போது கறுப்புக் கொடி கட்டி, கைகளில் பதாதைகள் ஏந்தி பொது மக்களும் மாணவர்களும் கோங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். அதேவேளை வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடியும் மதுபானசாலைகள் மீதான தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

டயகம நகரில் 200 மீற்றருக்கு ஒரு மதுபானசாலை அமைக்கப்படுவது குறித்து பலரும் வேதனை தெரிவிக்கின்றனர். குறிப்பாக, வீதியோரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் மதுபானசாலைக்கு அருகில் லயன் குடியிருப்புகள் காணப்படுகின்றன. அதில் 200 இற்கும் அதிகமானோர் வசித்து வரும் சந்தர்ப்பத்தில் பாடசாலை மாணவர்களும் அருகில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்நிலையில், மதுபானசாலை நிர்மாணிப்பதை உடனடியாக நிறுத்துமாறு அங்குள்ள பொதுமக்கள் டயகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தப்போராட்டம்ஞாயிற்றுக்கிழமைமதியம்டயகமநகரத்தில்இருந்துஆரம்பிக்கப்பட்டு, மேற்கு 3 ஆம் பிரிவில் இருக்கும் வைத்தியசாலை வரை சென்று, மீண்டும் நகரத்தை வந்தடைந்தது. இந்தப் போராட்டத்தில் மத குருமார், இளைஞர்கள், பெற்றோர்கள், சிறுவர்கள், வர்த்தகர்கள் என பலரும் இணைந்துகொண்டனர். (05)

# நுவரெலியாவில் கண் சத்திர சிகிச்சையில் பாதிக்கப்பட்டோருக்கு விரைவில் நஷ்டஈடு

## கெஹலிய ரம்புக்வெல உத்தரவாதம்



நுவரெலியா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை மேற்கொண்டு ஒவ்வாமை ஏற்பட்டவர்களில் 11 பேர் குணமடைந்துள்ளதோடு, இருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்திய நிறுவனமொன்றிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் காணப்பட்ட பற்றீரியா காரணமாகவே சத்திர சிகிச்சை மேற்கொண்டவர்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

எனினும் தற்போது அந்த நிறுவனத்திடமிருந்து மருந்துகள் முற்றாக பாவனையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் இரு சிறுவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் எனக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், அவர்களுக்கு மயக்க மருந்து வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குரிய குறித்த மயக்க மருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிறுவர்களுக்கு பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாகமுதலாவதுஅறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அதிலுள்ள தகவல்களை இப்போது ஊடகங்களுக்கு வெளியிட முடியாது. இறுதி அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் முழுமையான தகவல்கள் வழங்கப்படும். எவ்வாறிருப்பினும் குறித்தமருந்துஉட்படசந்தேகத்துக்குரிய ஏனைய சில மருந்துகளின் பாவனைகளும் இடைநிறுத்தப்பட்டு, அவை பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின்மருந்துகள்இவற்றில் உள்ளடங்குகின்றன.

பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் பதிவான இரு மரணங்களிலும், சுகாதாரதரப்பில்ஏதேனும் தவறு இழைக்கப்பட்டிருந்தால், அந்த பொறுப்பிலிருந்து எம்மால் விலக முடியாது.

மருந்துகளைஇறக்குமதிசெய்வதற்கு விலைமனு கோரப்படும். அவ்வாறு விலைமனு கோரப்படும்போது பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் முன்வராத சந்தர்ப்பத்திலேயே, பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் ஊடாக மருந்தை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாறாக, நாம் திட்டமிட்டு பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் ஊடாக மருந்துகளை இறக்குமதி செய்வதில்லை. நுவரெலியா வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்களில் 13 பேருக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இவர்களில் 11 பேர் குணமடைந்துள்ளனர். எனினும் எஞ்சிய இருவர் எதிர்கொண்டுள்ள பாதிப்புகள் அதிகமாகும்.

இவர்களுக்கு வலி நிவாரணியாகப் பயன்படுத்தப்பட்ட சொட்டு மருந்தில் காணப்பட்ட பற்றீரியா காரணமாகவே ஒவ்வாமை ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. குறித்த மருந்து இலங்கையில் பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டதாகும். இந்நிறுவனம் இலங்கைக்கு கடந்த 7 ஆண்டுகளுக்குமருந்துகளைஇறக்குமதி செய்கிறது. இலங்கைக்கு மாத்திரமின்றி 53 நாடுகளுக்கு இந்நிறுவனம் மருந்துகளை ஏற்றுமதி செய்கிறது.

அவ்வாறிருந்தும் இவ்வாறானதொரு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நஷ்ட ஈடு வழங்கப்படும்.

நாட்டிலுள்ள பெரும்பாலான வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் உள்நாட்டில் கனிசமானளவு வைத்தியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்காகவே வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 60 இலிருந்து 63 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அத்தோடு முது கலை பட்டதாரிகளை வைத்தியர் சேவையில் இணைத்துக்கொள்ளும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# முகநூல் பயனர்களுக்கு கடும் எச்சரிக்கை: மலையகத்தில் பிரமிட்முறை நிதி மோசடி

நுவரெலியா, கண்டி, கேகாலை மாவட்டங்களின் பல பகுதிகளில் சட்ட விரோத பிரமிட் முறையிலான நிதி வர்த்தகங்கள் அதிகரித்துள்ளன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களால் மிகவும் சூட்சுமமாக முகநூல் வழியாக இந்த மோசடி வர்த்தக செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனப் பாதிக்கப்பட்டோர் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

சுமார் ஒரு லட்சம் ரூபாவரை பணத்தை பெறும் குறித்த ஒரு வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆரம்பத்தில், பயனாளர்களுக்கு பணத்துக்குப் பதிலாக சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான தேநீர் கோப்பை தொகுதிகள் அல்லது உணவுத் தட்டுகளை வழங்குவதாகவும், பின்னர் 20 பேரை இணைத்துக்கொண்டு அதன் மூலம் பணத்தைப் பெற்றுக்கொடுத்தால் மாதாந்தம் 50 ஆயிரம் ரூபா வங்கிக்கு வைப்பீடு செய்யப்படும் என்றும் கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும், இந்த வலையமைப்பினரோடு இணைந்துகொள்பவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது, கவர்ச்சியான ஆடம்பரமான ஆண்/பெண்களை வரவழைத்து பணம் சம்பாதிக்கும் வழிவகைகளை கூறுவது என பலவாறு வலையமைப்பினர் செயற்படுவதாக முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

மேலும், இந்த வலையமைப்போடு தொடர்பு கொள்பவர்கள், தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களை இதில் இணைத்துக்கொள்வதற்காக அவர்களது வீடுகளுக்கும் சென்று வலையமைப்பினர் தொல்லை கொடுக்கின்றனர் எனவும், அவர்கள் பல வாகனங்களின் முன்பாக நின்று எடுக்கப்பட்ட படங்களை தமது முகநூல் பக்கத்தில் காட்டி பலரை மூளைச்சலவை செய்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பிராந்திய கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்கள், பிரபல கல்லூரிகள், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு பிரதானமாக செயற்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் அரச உத்தியோகத்தர்களாக இருப்பதால் பலரும் நம்பி பணத்தைக் கொடுத்து ஏமாற்றமடைந்துள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக பலர் மீது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பிரபல தமிழகத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒலிக்கப்போகும் மலையக மாணவியின் குரல்!



மலையக மண்ணுக்கு இசையால் புகழ் சேர்க்கும் நோக்கில் கண்டியை சேர்ந்த மாணவி கே.அானி தமிழகத்தின் பிரபல தமிழ் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பாகி வரும் இசை நிகழ்ச்சியில் பங்கேற்று பாடும் வாய்ப்பை பெற்று இந்தியா சென்றுள்ளார்.

இவர் புசல்லாவை நயாபன தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 9 இல் இவர் கல்வி கற்கிறார்.

ஒரு பெருந்தோட்ட தொழிலாளரின் மகளான இவர் இயல்பாகவே பாடும் திறமை கொண்டவர்.

அண்மையில் இவர் பள்ளியில் பாடிய பாடல் காணொளி சமூக ஊடகங்களில் வைரலானதன் மூலமே தமிழக தொலைக்காட்சியொன்று நடத்தும் சிறுவர்களுக்கான பிரபல இசைநிகழ்ச்சியின் தேர்வுப் போட்டியில் இந்தியாவின் புகழ்பெற்ற பாடகர்கள் நடுவர்களாக உள்ள அரங்கில் பாடுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

இந்த தேர்வுப் போட்டியில் ஆனி தனது பாடும் திறமையால் தேர்வாளர்களால் தெரிவுசெய்யப்பட்டால் இனிவரும் நாள்களில் தொடர்ச்சியாக குறித்த தொலைக்காட்சியின் இசை மேடையில் அவரது குரலும் இலங்கையின் அடையாளமாக ஒலிக்கும். (05)

# மின்னேரியா தேசிய பூங்காவில் விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்பாடுகள்

## ஜீப் சாரதிகள் தொடர்பில் தகவல்கள்

மின்னேரியா தேசிய பூங்காவில் விலங்குகளுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் நடந்துகொண்ட ஜீப் சாரதிகள் தொடர்பான தகவல்களை வனஜீவராசிகள் திணைக்களம் பெற்றுள்ளது.

குறித்த இரண்டு ஜீப்களும் மீண்டும் பூங்காவுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், சம்பந்தப்பட்ட சாரதிகளைக் கைதுசெய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக மின்னேரியா தேசிய பூங்காவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, யால தேசிய பூங்காவில் வன விலங்குகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனங்களை செலுத்திய சம்பவம் பதிவாகியிருந்தது. துரதிர்ஷ்டவசமாக, இதேபோன்ற மற்றொரு சம்பவம் மின்னேரியா தேசிய பூங்காவில் இருந்து பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்படும் வாகனங்கள் பொலிஸ், முப்படைக்கு வழங்கல்

சுங்கத்தினரால் கைப்பற்றப்படும் மற்றும் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட (அசெம்பிள்) வாகனங்களை சுங்கத்தினரிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக, அவற்றை பறிமுதல் செய்து பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பிரிவுச் சேவைக்கு வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்காக புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு ஏற்ற வகையில் பொலிஸ் சட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்ட பின்னர், அவை அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டு, அது சட்ட விரோத வாகனம் என்று நிரூபிக்கப்பட்டால், சுங்கத்தின் பொறுப்பில் வைக்கப்படும். இனிமேல் இந்த நடைமுறையின்றி, பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினரின் பயன்பாட்டுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (05)

# மரத்திலிருந்து ஆற்றில் குதித்த இரு சிறுவர்கள் மூழ்கிச் சாவு

## ஸ்ரீபுரவில் சம்பவம்

ஸ்ரீபுர - திஸ்ஸபுர பிரதேசத்தில் சனிக்கிழமை மாலை ஆற்றில் குளித்த இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

ஆற்றில் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கிய சிறுவர்கள் ஸ்ரீபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீபுர - திஸ்ஸபுர பகுதியைச் சேர்ந்த 12 மற்றும் 15 வயதுடைய இரு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

குறித்தசிறுவர்கள்மரத்தில்இருந்துஆற்றில்குதித்துள்ளனர் எனவும், இதன்போது அவர்களின் தலைகள் ஒன்றாக இடித்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஸ்ரீபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 05)





# மன்னார் - மாந்தையில் 85 கிலோ கஞ்சா பொதிகளுடன் இருவர் கைது

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு வீதியில் வைத்து சனிக்கிழமை மாலை 85 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார்மாவட்டகுற்றபுலனாய்வுபிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறிப்பிட்ட பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது வாகனமொன்றில் கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 85 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் 35 வயதுடைய மன்னார் - பேசாலை மற்றும் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதன்போது, மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைக்காக சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள், வாகனங்கள் ஆகியன மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

### ரணிலிடம் சவால் விடுவதால் பயனில்லை

நாடாளுமன்றத்தை உடன் கலைத்துவிட்டு மக்கள் ஆணைபெற்று மீண்டும் ஆட்சியமையுங்கள் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார். அனைத்து அரசியல் தரப்பினரிடத்திலும் வலியுறுத்தலாக அன்றி சவாலாகவே தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஆணை அற்ற ஒரு ஆட்சி தேசிய கடன் மறுசீரமைப்புக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கியதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்பது அவரது வாதம். அதாவது நாட்டின் மிக முக்கிய முடிவுகளை மக்களால் நிராகரிக்கப்பட்ட இரு தரப்புக்களான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா பொது ஜன பெரமுனவும் சேர்ந்து எடுப்பது தவறு, அதற்குப் பதில் இதுபோன்ற முக்கிய முடிவுகளை மக்களின் ஆணையைப் பெற்ற ஆட்சி ஒன்றே மேற்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலுமே அவரது கருத்து அமைந்துள்ளது.

நாடாளுமன்றத்திற்கு உடனடியாகத் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெற்ற ஆட்சி ஒன்று அமைக்கப்படுவதே உடனடித் தேவை என்பதை எதிர்க் கட்சிகளும் 2022 மே மாதத்திலிருந்தே வலியுறுத்தி வருகின்றன. ஆனால், மக்களால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவதற்குக்கூட அனுமதிக்கப்படாது நிராகரிக்கப்பட்டவரான ரணில் விக்கிரமசிங்கதான் இன்று இலங்கையின் 2 கோடி மக்களதும் தலைவிதியைத் தீர்மானிப்பவராகத் திகழ்கிறார். அது மட்டுமல்ல, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் நாட்டின் தனியார் ஊழியப் படையின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக்கூடிய அளவுக்கு மீறிய அதிகாரத்தையும் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்ற போர்வையில் தன்வசப்படுத்தியிருக்கிறார்.

மக்களாட்சித் தத்துவத்திற்கு முற்றிலும் நேரெதிரான செயற்பாடு இது. மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர், அரசமைப்பில் வேறு சில நல்ல நோக்கங்களுக்காகஉருவாக்கப்பட்டவழிவகைகளைவசப்படுத்தி, நாடாளுமன்றத்திற்குள்நுழைந்து, நாட்டின்அதியுயர் அதிகாரக் கதிரையைப் பிடித்து, 2 கோடி மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கிறார். எதிர்காலத்திற்கு மிக முக்கியமான முடிவுகளை எடுக்கிறார் என்பது மக்களாட்சித் தத்துவம் சொல்லும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சி முறைக்கு முற்றிலும் எதிரான செயல்.

ஆனால், அது பற்றில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தக் கவலையும் அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை. அவருக்கு நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி மக்களின் ஆணை யாருக்கு என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆசையும் நோக்கமும் இப்போதைக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் அதனைத் தெரிந்துகொள்வதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்ட – உள்ளூராட்சித் தேர்தலைக்கூட – குறுக்கு வழிகளில்நடத்தாமல்மக்களின்வாக்குரிமையையும் பறித்துச் செயற்பட்டு வருகின்றார் அவர்.

அத்தகைய நபரிடம் பேராயர் விடுத்துள்ள சவால் சலனத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். தனக்குக்கிடைத்துள்ள அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி தோற்றுப்போன தனதும் கட்சியனதும் சரிவைத் தூக்கி நிறுத்தும் வரை எந்தவொரு தேர்தலையும் சந்திக்கும் திராணி அரசுத் தலைவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. பதிலாக தேர்தல்கள் இன்றி அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான முயற்சிகளில் வேண்டுமானால் அவர் ஈடுபடக்கூடும் என்றே எதிர்பார்க்க முடிகின்றது.

அது இலங்கை வாழ் மக்களின் மிகப் பெரும் சாபக்கேடு.

# இலக்கியத்தில் இணைந்த பனை

அங்கம் – 3



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், அவுஸ்திரேலியா.

பனையென்பது செல்வமாகும் என்று கருதியே வந்திருக்கிறார் கள். பனையினைப்புலவர்கள்பலநிலைகளில் பார்த்திருக்கிறார்கள்.பனையின்பயனைப் பாடி இருக்கிறார்கள். பனையினை காதலிலும்கண்டுபாடியும்இருக்கிறார்கள். காதலில் சிக்கித்தவி க்கும் நிலையில் பிரிவுத் துயரினை வெளிப்படுத்தும் பாங்கில் பனையினைக் காட்டுவதும் நோக்கத்தக்கது.

திங்களும் திகழ் வான் ஏர்தரும் : இமிழ் நீர்ப்
பொங்கு திரைப் புணரியும் பாடு ஓவாதே :
ஒலி சிறந்து ஓதமும் பெயரும் : மலி புனற்
பல் பூங் கானல் முள் இலைத் தாழை
சோறு சொரி குடையின் கூம்பு முகை அவிழ
வளி பரந்து ஊட்டும் விரிவு இல் நாற்றமொடு
மை இரும் பனைமிசைப் பைதல உயவும்
அன்றிலும் என்புறு நாலும் : அன்றி இ
விரல் கவர்ந்து உழந்த கவர்வின் நல் யாழ்
யாமம் உய்யாமை நின்றன்று :
காமம் பெரிதே : களைஞரே இலரே !

என்ன ..... பாடலைப் பார்த்ததும் தலை சுற்றுகிறதா ? பயப்படாதீ ர்கள் இதுதான் எங்களின் சங்கத்தமிழ். சங்கத் தமிழனும் பனை யினைக் கொன் டாடுகிறான்.தலைவனைப் பிரிந்ததலைவியானவள்கலங்குவதாய் இப்பாடல் அமைகிறது. ' ஆற்றில் அலை மோதிக் கொண்டிருக்கிறது. ஆற்று நீர் பாயும்கானலில்முள்ளிருக்கும்.தாழம்பூ குழியிலைக் கூடையில் போட்ட சோறு போல் மொட்டு விருந்து பூத்திருக்கும் காட்சி தென்படுகிறது. காற்று அடிக்கிறது. தாழம்பூவின் மணம் அடிக்கும் காற்றையும்அடக்கிமணம்வீசிநிற்கிறது.

அங்கு இருக்கும் பனைமரத்தில் அன்றில் பறவை ஒன்று தன்னு டைய துணை யைத் தேடுஅழைக்கிறது . அந்த அன்றில்பறவை யின் குரல்எனது எலும்பை யே உருக்கும்படி செய்து நிற்கிறது. என் காம உண ர்வு பெருகிக் கொண்டே போகிறது. மனமாற்றத் துக்காக யாழை மீட்டிஎன் விரல்கள் ஓய்ந்தனவே அன்றி நள் ளிரவுப் பொழுது போகவில்லை ' என்றுவிரகதாபத்தைத்தலைவிவெளிப் படுத்துவதாய் இப்பாடல் அமைகிறது. இங்கே அவளின் விரக தாபத்துக்குக் காரணமான அன்றில் பறவையின் இருப்பிடம்' எங்கள் பனை ' என்பதுதான் முக்கிய கருத்தாகும்.

பரதவர்கள் வீடுகளைப் பனையோலையால்வேய்ந்தார்கள். அவர்களின் வேலியையும் பனை ஓலை கொண்டு அமைத்தார்கள் என்று நற்றிணை தெரிவிக்கிறது

கழி சூழ் படப்பைக் காண்டவாயில்
ஒலி காவோலை முள்மிடை வேலி

பனை ஓலையுடன் முட்களையும் சேர்த்து வேலி அமைத்த செய் தியை நற்றிணையின்இப்பாடல்காட்டிநிற்கிறது. இவ்வாறு அமை க்கப்பட்ட வேலியை அடுத்து பனைமரங்கள் உயர்ந்து வளர்ந்து இருந்தன. மணல் மேடும் அங்கு இருந்தது என்று நற்றிணை காட்டி நிற்கிறது.

தலைவியின் வருத்தத்தைக் காட்டுவதற்கு குறுந்தொகை வரு கிறது. இங்கும் பனையினத் தொட்டே பாடல் அமைகிறது.

பனைத்தலைக்
கருக்குடை நெடுமடல் குருத்தொடு
கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்
கணங்கொள் சிமைய வணங்குங் கானல்
ஆழிதலை வீசிய வயிர்ச்சேற் றருவிக்
கூழைபெய் எக்கர் குழீஇய பதுக்கை
புலர்பதங் கொள்ளா வளவை
அலரெழுந்தன்றிவ்வழுங்கலூரே

பனையின் உச்சியிலுள்ள கருக்கினையுடைய நீண்ட மட்டையானது குருத்தோடுமறையும்படிஇகடுமையான காற்றினால் குவிக் கப்பட்ட இ உயர்ந்த வெண்மையான மணற்குவியல்கள் இ சிகரங்களாக நிறைந்தி ருக்கின்றன. கடற்கரையில்இத்தகையசூழலில்தனித்து இருக்கின்ற தலைவியின் விரகதாபம் இங்கே காட்டப்படுகிறது. விரகதாபத்தை அறிவது முக்கியமல்ல. அந்த நிலையில் எங்கள் பனை காட்டப்படுவ துதான் கருத்திருத்த வேண்டியதாகும்.

பாரியின் பிள்ளைகளான அங்கவைஇ சங்கவைஇ திருமணத்துக்கு மூவேந்தர்களும் வந்திருந்தார்கள்.வந்திருந்தமூவேந்தர்களும் தங்களுக்குப் பனம் பழம் வேண்டும் என்று கேட்டார்கள்.அங்கு ஔவையார் இருந்தார்.பாரியின் பிள்ளைகளின் திருமணத்துக்கு அவரே காரணமாய் இருந்ததால் வந்த விருந்தினர் விருப்பத்தை எப்படியும் நிறைவேற்ற எண்ணங்கொண்டார். அப்பொழுது பனம் பழக் காலம் இல்லாமல் இருந்தது. ஔவையார் பந்தலை விட்டு வெளியே வந்தார்.வெட்டப்பட்ட பனையின் துண்டங்களைக் கண்டார்.

'திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத்து ஈன்று பச்சோலை சல சலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் கறுத்து நுனி சிவந்து
பங்குக்கு மூன்று பழம் தரவேண்டும் பனந்துண்டமே '

கண்டதும் இவாறு பாடினார். பாடியவுடன் இ பனந்துண்டம் வளர்ந்து பனையாகிப் பனம்பழத்தைத் தந்ததாம் என்று இப்பாடல் எமக்குச் சொல்லி நிற்கிறது. ஔவையும் எங்கள் பனையினைப் பாடலால் காட்டுகிறார் என்பதும் நோக்கத்தக்கதேயாகும்.

'கற்றறிந்த நாவினார் சொல்லார்தம் சோர்வஞ்சி
மற்றையராவார் பகர்வர் பனையின் மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி '

பனையினை மையமாக வைத்து அறிவுரை பகர்வதையும் புலவ ர்கள் விட்டு விடாரில்லை என்பதற்கு இப் பாடல் சான்றாகி நிற்கிறது.

பனையினைப் பாடிப் பல புலவர்கள் புளக்காங்கிதம் அடைந்தா ர்கள் என்றுதான் எண்ணலாம் அல்லவா! பாடப்படும் அளவுக்கு எங்கள் கற்பகதருவும் இருந்திருக்கிறது என்பதுதான் முக்கிய செய்தியாகும்.

தாலவிலாசம் என்னும் நூல் மிகவும்பழமையானது.பனைமரம்பரம் பற்றிய நூல் என்னும் நிலையில் 18 ஆம் நூற்றாண்டில் வந்த இந்த நூல்தான் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. இந்த நூலினை அடியொற்றியே எங்கள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் பின்னர் ' தாலவிலாசத்தை ' படைத்தார். பனைபற்றி நாட் டார் பாடல்கள் பலவும் இருக்கின்றன. வடலி என்று சொல்லுவது யாழ்மண்ணுக்கு உரியதேயாகும். அந்தச் சொல் வரும் வகையில் பனை பற்றிய ஒரு நாட்டுப்பாடலைப் பார்ப்போம் வாருங்கள்.

வழிக்கரையே நிற்கு மந்த
வடலி மரப் பெண் பனையே
வாறவர்க்கும் போறவர்க்கும்
என் செய்வாய் பெண்பனையே
இருக்கத் தடுக்காவேன்
இட்டிருக்கப் பாயாவேன்
கொழிக்க நல்ல தங்கையர்க்கு
கொழி சுளகு நானாவேன்
புடைக்க நல் தங்கையர்க்கு
புடை சுளகு நானாவேன்
படிக்க நல் தம்பியர்க்கு
பட்டோலை நானாவேன்
எழுத நல் தம்பியர்க்கு
எழுத்தோலை நானாவேன்
தூரத்து வன்னிமைக்கு
தூதோலை நானாவேன்
வாசலிலே வன்னிமைக்கு
வழக்கோலை நானாவேன்

என்று அந்த நாட்டுப்பாடல் எங்கள் கற்பகதருவை கண்டு களிக்கிறது. கற்பகதருவாம் பனையினைப் பாடல்களில் பார்த்தோம். பழமொழிகளும் பனையினை விட்டு வைக்கவில்லை. அவற்றையும் பார்ப்பதும் நல்லதல்லவா!

'பனை நிழலும் நிழலோ பகைவர் உறவும் உறவோ '
'பனைமரத்துக்குக் கீழே நின்று பாலைக்
குடித்தாலும் கள் என்பார் '
'பட்டணத்து நரியை பனங்காட்டு நரி ஏய்த்துவிடும் '
'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததாம் '
'காவோலை விழக் குருத்தோலை சிரித்ததாம் '

( வளரும் )



காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர்
Kalaikkathir

# மாலி நோக்கிப் புறப்பட்டுள்ள இலங்கை தரைப் படையினர்

ஐக்கியநாடுகள் அமைதிப்படையுடன் இணைந்து கொள்வதற்காக நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இலங்கை இராணுவ வீரர்கள் கடந்த சனிக்கிழமை மாலை மாலி நோக்கி புறப்பட்டனர் .

20 அதிகாரிகள் மற்றும் 150 இதர அணிகள் அடங்கிய இலங்கை இராணுவத்தினர் மாலிக்கு சென்றுள்ளனர்.

5ஆவது இலங்கை சின்ஹா ரெஜிமென்ட், இலங்கை கவசப் படை, இலங்கை பொறியாளர்கள், இலங்கை சிக்னல் கார்ப்ஸ், இயந்திரமயமாக்கப்பட்ட காலாட்படை படைப்பிரிவு, ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் பிற அணிகள் பொறியியலாளர் சேவைகள், இலங்கை இராணுவ சேவைப் படைகள், இலங்கை இராணுவ மருத்துவப் படை, இலங்கை இராணுவ ஆயுதப் படைகள், இலங்கை மின் மற்றும் இயந்திரப் பொறியியலாளர்கள், இலங்கை இராணுவப் பொலிஸ் படை, இலங்கை இராணுவ பொது சேவைப் படை மற்றும் இலங்கை தேசிய காவலர் ஆகியோர் அணிகள் அடங்கிய இலங்கை இராணுவத்தினர் மாலிக்கு சென்றுள்ளனர்.

இதனையடுத்து , எஸ்.எல்.எஸ்.ஆர். ரெஜிமென்டல் தலைமையக மைதானத்தில் நடைபெற்ற மரியாதை அணிவகுப்பில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே அவர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டமை குறிப்பி டத்தக்கது. (05)





# குளவி கொட்டுக்கு இலக்கான பல்கலை மாணவர்கள் 42 பேர்

## கண்டி வைத்தியசாலையில் சேர்ப்பிப்பு

ஹந்தானைபிரதேசத்தில் உள்ள மலை ஒன்றில் ஏற வந்த பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளது.

இந்த சம்பவம் சனிக்கிழமை மாலை பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குளவி கொட்டியதில் 15 மாணவிகள் மற்றும் 27 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், உடனடியாக அவர்கள் பொலிஸ், இராணுவம் மற்றும் பிரதேசவாசிகளால் 1990 அம்புலன்ஸ் மூலம் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மீபே பல்கலைக்கழக மாணவர்கள் 276 பேரும் ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் 64 பேரும் இந்த மலைக்கு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பதுளை – ஹாலி எல வீதியில் விபத்து; ஒருவர் சாவு; 4 பேர் காயமடைந்தனர்

பதுளை - ஹாலி எல வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 2 சிறுவர்கள் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (05)

# பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்படவேண்டும் நுகர்வோர் உரிமை பாதுகாப்பு தேசிய இயக்கம் வலியுறுத்து

நடைமுறையில் உள்ள மின் கட்டண குறைப்புக்கு ஏற்ப பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்படவேண்டும் என நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடடவை வருமாறு -

எரிவாயு விலைகள் குறைக்கப்படும்போது பேக்கரி உரிமையாளர்கள் சங்கங்கள் தமது வெதுப்பகங்கள் மின்சாரத்தின் மூலம் இயங்குவதாகக் கூறுகின்றனர். அதன் காரணமாக பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைக்க முடியாது என அந்த சந்தர்ப்பங்களில் தெரிவித்தனர். இருப்பினும் தற்போது அதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ள நிலையில் பேக்கரி உற்பத்திகள் மற்றும் சிற்றுண்டிசாலை உணவகங்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும். - என்றார். (05)

# மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீள தேசிய கட்டுமான விருது




கட்டுமானத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் கட்டுமானத் துறையில் தேசிய விழாவான தேசிய கட்டுமான விருதுகள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின் பேரில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் நிர்மாணக் கைத்ததொழில் அபிவிருத்தி அதிகார சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு 07, சவ்சிறிபாயவில் அமைந்துள்ள நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை 31 ஆவது தடவையாக இவ்விழா நடைபெற்றது.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக விருது வழங்கும் விழாவை இரண்டு ஆண்டுகளாக நடத்த முடியவில்லை.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், சிவில் இன்ஜினியரிங் திட்டங்கள், கட்டட திட்டங்கள், மின் மற்றும் இயந்திர கட்டுமானம், பசுமை கட்டுமானம் மற்றும் பிராந்திய திட்டங்கள் ஆகிய பிரிவுகளில் 65 விருதுகள் இங்கு வழங்கப்பட்டன.

இந்த தேசிய விருது விழாவின் முதன்மை நோக்கம், இலங்கையில் நிர்மாணத்துறையை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நிர்மாணத் துறையில் சிறந்து விளங்குபவர்களை இனங்கண்டு, அந்த சிறப்பை அடைவதற்கு பயன்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பிடுவதும், இலங்கையின் நிர்மாணத்துறையின் நிபுணத்துவம் மற்றும் சிறப்பை மதிப்பிடுவதும் ஆகும். நிர்மாணக் கைத்தொழில் இலங்கையின் இரண்டாவது பெரிய கைத்தொழில்துறையாகும். உள்நாட்டில், இது தற்போது நாட்டின் பொருளாதாரத்துக்கு கிட்டத்தட்ட 8 வீதம் பங்களிக்கிறது.

2014 /33 ஆம் இலக்க நிர்மாணக்கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம், நிர்மாணத் துறையில் விரும்பிய இலக்குகளை அடைவதற்கும் அதனை மேலும் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் நிர்மாணத் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவியது. உலகளாவிய தரத்திற்கு ஏற்ப இலங்கையில் நம்பகமான மற்றும் திறமையான கட்டுமானத்துறையை உருவாக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை முயற்சி எடுத்து வருகிறது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக் கடிக்குத் தீர்வு காணப்படும் இந்த வேளையில், இந்நாட்டின் நிர்மாணத் கைத்தொழிலைப் பாதுகாத்து, அந்தக் கைத்தொழிலாளர்களை வெளிநாட்டு வர்த்தகங்களுக்கு வழிநடத்துவது காலத்தின் தேவையாக உணரப்பட்டுள்ளது. அதற்கான குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால உத்திகளை அரசு தயாரித்துவருகிறது. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தியின் மூலம், மிகவும் நம்பிக்கையான மாற்றத்தையும், நாட்டின் விரைவான வளர்ச்சி இலக்குகளையும் அடைவதற்கான பாதை திறக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்களான அருந்திக பெர்னாண்டோ மற்றும் தெனுக விதானகமகே, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆர்.எச். ருவினிஸ், அதன் பணிப்பாளர் நாயகம் எஸ். அமரசேகர உள்ளிட்டோர் பலர் கலந்துகொண்டனர். (05)

# வன உயிரிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவர் மீது செவனகலவில் தாக்குதல்; 6 பேர் கைது

செவனகல, நலசிறிகம பிரதேசத்தில் இறைச்சிக்காக மிருகங்களை வேட்டையாடும் நபர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவர் மீது ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக உடவலவ வனவிலங்கு அலுவலகம் தெரிவித்துள்ளது.

உடவலவ தேசிய பூங்காவின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் இரு உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

குறித்த குழுவினர் வனவிலங்கு அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது மிருகங்களின் தலை, இரண்டு துப்பாக்கிகள், இரண்டு ரைபிள் தோட்டாக்கள், குளிர்சாதனப் பெட்டி, சைக்கிள், யானைத் தோல், இறைச்சி வெட்ட பயன்படுத்தியதாக கூறப்படும் மூன்று கத்திகள் என்பன கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (05)



# கொழும்பு ஆமர் வீதியில் போலி வைத்தியர் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதாகினார்

தொழில் ரீதியாக பதிவு செய்யப்பட்ட வைத்தியர் போன்று நடித்து சட்ட விரோதமாக மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றை நடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர் உஸ்வெடகெய்யாவ பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். 55 வயதான சந்தேக நபர் கொழும்பு ஆமர் வீதியை வதிவிடமாகக் கொண்டவராவார்.

தொழில் ரீதியாக பதிவு செய்யப்பட்ட வைத்தியர் எனக் கூறிக்கொண்டு சட்ட விரோத மருத்துவ நிலையமொன்றை நடத்திய சந்தேக நபர் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ சான்றிதழை பெறுவதற்காக பொலிஸ் முகவர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டு, பின்னர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# குச்சவெளி இறக்ககண்டி பிரதேசத்தில் இரு இளைஞர்கள் மீது துப்பாக்கிச் சூடு

*திருகோணமலையின் குச்சவெளியிலிருந்து இறக்ககண்டி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள்மீது நீர் வழங்கும் கால்வாய்க்கு ஒன்றுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் மறைந்திருந்த ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*17 மற்றும் 21 வயதுடைய இரு இளைஞர்களே காலில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர் எனக் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.*

*துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர் குறித்தோ இதன் பின்னணிகள் தொடர்பிலோ இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*குச்சவெளி பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (05)*

## மே 9 வன்முறையில் பாதிக்கப்பட்டோருக்கு

# இதுவரை நீதி கிடைக்கவில்லை அரசுஎன்ற ரீதியில் வெட்கக்கேடு

## பந்துல குணவர்தன தெரிவிப்பு

மே 9 சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்காமல் இருப்பதையிட்டு அரசாங்கம் என்ற ரீதியில் வெட்கமடைகிறோம் என போக்குவரத்து, ஊடகத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கெஸ்பேவ பகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

அரசியல் வாழ்க்கையில் பல சவால்களைக் கடந்துள்ளோம். கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகித்தவர்கள் அரசாங்கத்தை பல வீனப்படுத்தும் செயற்பாடுகளில் முன்னின்றுசெயற்பட்டார்கள்.



ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு சேவையாற்றினார்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாது. குறுகிய அரசி யல் நோக்கத்துக்காக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஒருபோதும் உண்மையாகி விடாது. முன்வைக் கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு காலம் பதில் சொல்லும் என்ற நம்பிக்கை உள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காக அரசியல் கொள்கைகளை புறக்கணித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான அரசாங்கத்தை தோற்றுவித்தோம். நாடு என்ற ரீதியில் பாரிய சவால்களை வெற்றிகொண்டுள்ளோம். தேசிய கடன் மறுசீரமைப்பு சிறந்த ஆரம்பமாகும்.

தேசிய கடன் மறுசீரமைப்பு எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாது. சர்வதேச நிதி மற்றும் நீதி நிறுவனங்களின் ஆலோசனைகளுடன் வெளிநாட்டு அரசமுறை கடன்களும் வெகு விரைவில் மறுசீரமைக்கப்படும். பொருளாதாரம் ஸ்தீரமடைந்ததன் பின்னர் அவரவர் தமக்கு ஏற்றாற்போல் அரசியல் செய்துகொள்ளலாம்.

பொருளாதார பாதிப்பை முன்னிலைப்படுத்தி கடந்த ஆண்டு மிலேட்சத்தனமான சம்பவங்கள் நாட்டில் இடம்பெற்றன. கடந்த ஆண்டு மே 09 ஆம் திகதி காலி முகத்திடல் வன்முறை சம்பவத்தைத் தொடர்ந்து மக்கள் பிரதிநிதி ஒருவர் பகிரங்கமாக படுகொலைசெய்யப்பட்டார். 70 இற்கும் அதிகமான அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த பயங்கரவாதச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மந்தகதியில் காணப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிக்காமல் இருப்பதையிட்டு அரசாங்கம் என்ற ரீதியில் வெட்கமடைகிறோம். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## சிவபூமி மனவிருத்தி பாடசாலைக்கு வயது 20











யாழ்ப்பாணம் - கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை இருபதாவது ஆண்டுப்பூர்த்திவிழா நேற்று இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் கோண்டாவிலில் உள்ள சிவபூமி பாடசாலையில் காலை 9.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தலைமை அதிதியாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக மருத்துவர் வை.மனோமோகன் தம்பதியினரும் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், சிவபூமி பாடசாலை அதிபர், சிவபூமி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பாடசாலையின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தி விழா சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ஆறு திருமுருகனின் வரலாற்றை ஆங்கிலமொழியில் எடுத்துக் கூறும் நூலும் வெளியிடப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் முதன் நிலைப் பாடசாலையாக சுப அபிமானி விருது பெற்று மிளிரும் சிவபூமி பாடசாலையின் மாணவர்கள் சர்வதேச ரீதியில் விசேட ஒலிம்பிக் போட்டியில் மூன்று தடவை கிறீஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று பதக்கங்கள் பெற்று இந்த 20 வருடங்களில் சாதித்திருக்கிறார்கள்.

## புத்தகத்தில் இல்லாத பல நீதிமன்றில் வெளிப்படும் வழக்குத்தாக்கல் செய்யுமாறு சவேந்திரவுக்கு சவால்

அரகலய - அமெரிக்கா தொடர்பில் நான் குறிப்பிட்ட கருத்துக்கு எதிராக சவேந்திர சில்வா நீதிமன்றம் சென்றால் புத்தகத்தில் இல்லாத பல விடயங்களை ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவேன்.

முடிந்தால் அவர் வழக்கு தாக்கல் செய்யட்டும் என என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

குருவிட்ட பகுதியில் இடம்பெற்ற மேலவை இலங்கை சபை கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

69லட்சமக்களாணையை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறோம் என குறிப்பிடும் தகைமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது.

பொதுஜன பெரமுன நாட்டு மக்களுக்கு வழங்கிய ஆணையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலினப்படுத்தியுள்ளார்.

தாம் அரசியல் செய்வதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்தார் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது முட்டாள்தனமானது.

பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பலவீனப்படுத்தினார். மக்களின் தன்னிச்சையான போராட்டத்தை அவர் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்கால நிலைமை கவலைக்குரியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு என்ற பெயரில் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை அவர் முன்னெடுத்துள்ளார்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு இலாபமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலாபமடையும் டெலிகொம் நிறுவனத் தின் பங்குகளை பிரித்தானியாவில் வாழும் அல்லிராஜாவுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சந்திப்புக்களில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இது முற்றிலும் முறையற்றது. பொதுஜன பெரமுனவினரும் கொள்கை இல்லாமல் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.

அரகலய (போராட்டம்) அமெரிக்காவுக்கு இடையிலான தொடர்பு குறித்து நான் வெளியிட்ட ஒன்பதில் மறைந்த கதை புத்தகத்தால் தனக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா எனக்கு அறிவித்துள்ளார். காலி முகத்திடல் களத்தை அடியொற்றி செய்த டீல் நடவடிக்கைகளை ஆதாரபூர்வமாக என்னால் வெளிப்படுத்த முடியும். புத்தகத்தில் இல்லாத பல விடயங்களை ஆதாரபூர்வமாக நீதிமன்றத்தில் வெளிப்படுத்துவேன் முடிந்தால் சவேந்திர சில்வா வழக்கு தாக்கல் செய்யட்டும். - என்றார். (05)

## கடன் மறுசீரமைப்புக் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்துக: இல்லையேல் நிதிஸ்திரத்தன்மையற்ற நிலைமை உருவாகும்

### கலாநிதி எம்.கணேசமூர்த்தி தெரிவிப்பு

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர் பில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இல்லையேல் கடன் மறுசீரமைப்பு மக்களிடையே வீண் குழப்பத்தை தோற்றுவித்து அது நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையற்ற நிலைமையை ஏற்படுத்தும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

நேர்காணலொன்றில் கலந்துகொண்டு இவ்வாறு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கடன் மறுசீரமைப்பு நாட்டு மக்களிடையே தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது. மேலும் தேசிய கடன் மறுசீரமைப்பு நாட்டின் நிதி நிலைமை உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

குறிப்பாக, ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டில் நிச்சயமற்ற தன்மை அல்லது பீதி நிலைமை ஏற்படுமாயின், அது நாட்டின் அபிவிருத்திக்கு சிறந்ததல்ல. எவ்வாறாயினும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் ஏற்படும் பீதி நிலை இவ்வாறான சூழலை ஏற்படுத்தலாம். தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான விடயங்களை கட்டாயமாக அரசாங்கம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் பீதி ஏற்படாத வண்ணம் இருக்கவே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதை எங்களால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

மேலும் நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை குறைக்க வேண்டும் என்பது நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பாகும். குறிப்பாக நாட்டின் மொத்த கடன் அளவு 83.6 பில்லியனாக காணப்படுகின்றது. அவற்றுள் 42 பில்லியன் உள்நாட்டு கடனாகும். மிகுதி வெளிநாட்டு கடன்களாகும்.

நாணய நிதியம் இந்த கடனில் 17 பில்லியனை குறைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. அதன் அடிப்படையில் இந்த 17 பில்லியன் ரூபாவை உள்நாட்டு கடனில் குறைப்பதா அல்லது வெளிநாட்டு கடனில் குறைப்பதா என்பது தொடர்பில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

கடந்த காலங்களில் அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட முட்டாள்தனமான தீர்மானங்கள், பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணற்ற கடன்கள், ஊழல் மற்றும் மோசடி என இவை அனைத்தையும் தற்போது நாட்டு மக்கள் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, இன்று நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே வறுமை அவர்களின் கழுத்தை நெரிக்கும் நிலையில் தற்போது கடன் மறுசீரமைப்பு காரணமாக நிதி ஸ்திரத்தன்மையற்ற நிலை தோன்றுமாயின், மேலும் இவர்கள் பாதிக் கப்படுவார்கள்.

மேலும் ஆட்சியாளர்கள் செய்த தவறுகள் காரணமாக நாட்டு மக்கள் தண்டனை அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. - என்றார். (05)

## சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தார்



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை நிறைவு செய்துவிட்டு திரும்பும்போது தென்மராட்சி மறவன்புலவுவில் உள்ள சிவசேனையின் தலைவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் குறித்த சந்திப்பு நடைபெற்றது.

மைத்திரிபால சிறிசேனவுக்கும், யாழ். மாவட்ட இந்துமத குருமார்கள் மற்றும் இந்துமத அமைப்புகள் இடையிலான சந்திப்பொன்று ஜூன் 29 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது பாபர் மசூதிகளை இந்து பிரதேசங்களில் உருவாக்காதீர்கள். தையிட்டியில் உருவானது ஒரு பாபர் மசூதி. அதை கட்டிய பிக்குவின் ஆடையை களைய வேண்டியது உங்கள் கடமை என சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பில் எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## பாட்டனும், பேரனும் கடலில் மூழ்கிச் சாவு

### புத்தளத்தில் சம்பவம்

கடலில் குளிக்கச் சென்ற இரண்டு பேர் கடலில் மூழ்கி சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை மாலை புத்தளம் நுரைச்சோலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் இலந்தையடி பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற இருவர் கடலில் மூழ்கி உயிரிழந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மதுரங்குளி ஹிதாயத் நகரைச் சேர்ந்த கச்சு முஹம்மது சஹீத் (வயது மீ 60) மற்றும் அஜ்வாத் சஹீர்கான் (வயது 22) ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மூன்று இளைஞர்கள் கடலில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர். இதனை அவதானித்த இளைஞர்களின் பாட்டன் குறித்த இளைஞர்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு இருவரைக் காப்பாற்றி கரையில் விட்டுவிட்டு மற்றுமொருவரைக் காப்பாற்ற முயற்சித்த வேளை பேரன் மற்றும் பாட்டன் ஆகிய இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது, அப்பகுதி மக்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். இலந்தையடி பகுதியில் ஒருவர் சடலமாக கரையொதிங்கியுள்ளார். மற்றுமொருவர் ஆலங்குடா கடற்கரைப் பகுதியில் சடலமாக கரையொதுங்கியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுரைச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்தனர். (05)

## யாழ். தொடருந்து நிலையம் அருகிலேயே கசிப்பு உற்பத்தி

### சந்தேகநபர் ஒருவர் கைது



யாழ்ப்பாண தொடருந்து நிலையத்திற்கு அருகில் சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டில் 28 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 30 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

## பாஷையூரில் நாளை நடமாடும் சேவை

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி ஜூலை 5 காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

19, 20 வட்டாரங்களுக்கான ஆதனவரி அறிவித்தல் படிவம், சோலைவரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, நீர் வழங்கல் கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றை பெற்று யாழ் மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்குடன் இந்தத் நடமாடும் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்று ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார். நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியில் 5% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FREEDOM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்







# நாகபூசணி அம்மன் தீர்த்தம் நேற்று

வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவத்தின் தீர்த்த திருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக காலை இடம்பெற்றது.

ஆலயத்தில் காலை இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து , நாகபூசணி அம்மன், பிள்ளையார் மற்றும் முருகன் சகிதம் கங்காதரணியில் தீர்த்தமாடினார்.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் சூழ ஆலயத்தில் இருந்து தீர்த்தக்கரைக்கு எழுந்தருளினார்.

# நெல்லைச் சந்தைப்படுத்த முடியாது கிளிநொச்சியில் விவசாயிகள் திணறல்

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் விவசாயிகள் தமது காலபோக நெல்லைக்கூட விற்பனை செய்யமுடியாத அவல நிலை நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் காலபோகம் நெற் செய்கைக்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு இரசாயன உரம் மற்றும் 20 ஆயிரம் ரூபாவிற்குக் கிருமி நாசினி என அதிக விலைக்கு உள்ளீடுகளைக் கொள்வனவு செய்து நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டபோதும், நெல்லுக்கு உரிய விலையைப் பெறமுடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.




அரசு ஒரு கிலோ நெல்லுக்கான விலை 100 என அறிவித்திருந்தபோதிலும் உரிய முறையில் கொள்வனவு செய்யப்படாத காரணத்தினால் தம்மால் நெல்லைச் சந்தைப்படுத்த முடியவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

அறுவடை செய்த நெல்லை வீடுகளிலும் கடைகள் மற்றும் அயலவர் உறவினர் வீடுகளிலும் அடுக்கி வைத்துவிட்டுக் காத்திருக்கின்றனர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர். அந்து)பூச்சியின் தாக்கத்திலிருந்து நெல்லைப் பாதுகாக்க முடியாது திண்டாடி வருகின்றார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் நெல்லுக்கான உரிய விலையினை உரிய காலத்தில் கொடுத்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

# விபத்தில் சாரதி காயம்

ஏ-9 வீதியில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சிறிய ரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்கம் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

பளைப்பொலிஸ்பிரிவிற்குட்பட்ட புதுக்காட்டுச்சந்தி பகுதியில் ஏ-9 வீதியில் யாழ். நோக்கி விற்பனைப் பொருட்கள் ஏற்றி வந்த சிறிய ரக வாகனம் ஒன்றே வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்கம் மின் கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான வாகனச்சாரதி பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையகத்தில் தொடர் மழை; பிரதான வீதிகளில் மண்சரிவு




நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையைத் தொடர்ந்து பல இடங்களில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுக்காலை நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா கிளாரண்டன் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக அவ்வீதியூடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டு ஒரு வழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப்பெய்துவரும் மழை காரணமாக நுவரெலியா தலவாக்கலை ஏ - 7 பிரதான வீதியில் பல இடங்களில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டு, மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் கற்கள் புரளும் அபாயமும் காணப்படுவதால் அவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியான சீரற்ற வானிலை காரணமாக அடிக்கடி கடும் பனி மூட்டம் நிறைந்து காணப்படுவதால் பிரதான வீதிகளைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாகத் தங்களது வாகனங்களைச் செலுத்த வேண்டும் என்று போக்குவரத்துப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# சட்டவிரோத மணல் அகழ்வு பற்றி கல்லாறில் அதிகாரிகள் ஆராய்வு




சுண்டிக்குளம் பறவைகள் சாரணாலயத்திற்குள் அடங்கும் கல்லாறு பகுதியில் சட்டவிரோதமாக இடம்பெற்றுவரும் மணல் அகழ்வினை கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் குழு நேற்றுப் பார்வையிட்டனர்.

வனஉயிரிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சட்டங்களுக்கு பொறுப்பான உதவிப் பணிப்பாளர் டி.எம்.வீரசிங்க தலையிலான குழுவினரே சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்ற பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டனர். குறித்த பகுதியிலிருந்து பெருமளவில் மண் அகழப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தடுக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகள் அங்கு ஆராய்ந்தனர்.




காலைக்கதிர்
Kalaikkathir



# முத்துராஜாவுக்கு சிகிச்சை ஆரம்பம்

தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட 'முத்துராஜா' யானைக்குசிகிச்சையளிக்கும்பணிகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை விசேட விமானத்தின் ஊடாக 'முத்துராஜா' தாய்லாந்துக்கு அழைத்து செல்லப்பட்டது.

முத்துராஜாவின் காலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு சிகிச்சையளிக்கும் நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பரிசோதனைகளுக்கு தேவையான இரத்த மாதிரிகள் யானையிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# சிறுவருக்கான மாற்று போசணை திட்டத்தை அறிமுகப்படுத்த முடிவு

6 மாதம் முதல் 3 வயதுக்கு இடைப்பட்ட சிறார்களுக்கு, மாற்று போசணைத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரச குடும்பநல சுகாதார சேவைகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

திரிபேஷா உற்பத்தியை வழமைக்கு கொண்டு வரும் வரை இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில், சிறார்கள் முட்டைகளை அதிகமாக உண்ணுவதால், திரிபோஷாவுக்கு மாற்றீடாக முட்டையை வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என அரச குடும்பநல சுகாதார சேவைகள் சங்கத்தின்தலைவர்தேவிகாகொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால்வழங்கப்படும்திரிபோசிறுவர்களுக்குவழங்கப்படாமல் உள்ளமை பிரச்சினையாக எழுந்துள்ளது.

மேலதிக ஊட்டச்சத்தாக வழங்கப்பட்ட திரிபோஷவை வழங்க முடியாத நிலை காணப்படுமாயின் அதற்கு நிகரான மாற்றீடு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

குடும்பநல சேவையாளர்கள் என்ற அடிப்படையில், 6 மாதம் முதல் 3 வயதுக்குஇடைப்பட்டசிறார்களுக்கு மீண்டும் திரிபோஷா வழங்கப்படும் வரையில், மாற்றீடாக மாதாந்தம் ஒரு தொகை முட்டையை வழங்குவதற்கு பரிந்துரைப்பதாகவும் குறித்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (05)

# மாயமான மீனவர்களில் ஒருவர் சடலமாக மீட்பு!

குளம் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் - கட்டுக்கரைக் குளத்திலிருந்துகுறித்தசடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி குளத்தில் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றிருந்த இரண்டு மீனவர்கள்ஞாயிற்றுக்கிழமை காணாமல்போயிருந்தனர்.

அவர்களில் ஒருவரே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலமாக மீட்கப்பட்ட மீனவர் பரப்பாங்கண்டல்பகுதியைச் சேர்ந்த57வயதானவர்எனத் தெரியவந்துள்ளது.

காணாமல்போயுள்ள மற்றைய மீனவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (02)

# அரசின் செயற்பாட்டினால் நாட்டில் மக்களுக்கு குப்பை மட்டுமே மிஞ்சும்

## பேராயர் கர்தினால் காட்டம்



தற்போதைய ஆட்சியாளர் கள் நாட்டை வீழ்ச்சியடையச் செய்து வருவதாககொழும்பு பேராயர் கர்த்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தொரு நிலையில் 2048 இல் அபிவிருத்தி அடைவோம் என்ற பொய்யான கருத்தை வெளியிடக் கூடாது என்றும் கூறியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பொய்யான வாக்குறுதிகளை எங்களுக்குக் கொடுக்காதீர்கள், ஜனாதிபதி அவர்களே. இது 2024 வரை நீடித்தால் இந்த நாடு அழிந்துவிடும்.

20 வீதமான மக்கள் நாட்டின் அனைத்து வளங்களையும் எடுத்துக் கொண்டுள்ளனர். 80 வீதமான மக்களுக்கு சரியான உணவைப் பெற முடியவில்லை.

கொழும்பு துறைமுகம் டிகோவிட்டவரைநீடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது அரசாங்கம் துறைமுகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பல்வேறு நாடுகளுக்கு விற்பனை செய்கின்றது.

தற்போதுள்ள துறைமுகம் துண்டு துண்டாக விற்கப்படுகிறது. இந்தமனிதன்என்ன கனவுகாண்கிறான்? அவருடைய இலக்கு என்ன? இதுதான் இலக்கு.

முத்துராஜவெல முழுவதையும் அழித்துவிட்டு, இவற்றை வெளியூர்களுக்கு விற்று, சாப்பிட்டு, குடித்து, உல்லாசமாகச் செத்துவிடுவார்கள்.

நாட்டுமக்களுக்குகுப்பை மட்டுமேமிச்சமாகும். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த நடவடிக்கை தொடருமானால் 2048 ஆம் ஆண்டளவில் நாடு அழிந்துவிடும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

இலங்கையில் மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே கோரளை, நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கே இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (02)

# மிருகக்காட்சிசாலையில் சிறாருக்கு இலவச அனுமதி

தெஹிவளையில் உள்ள விலங்கியல் பூங்காவிற்கு செலவதற்கு சிறார்களுக்கு நேற்று (திங்கட்கிழமை) இலவச அனுமதி வழங்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளைமிருகக்காட்சிசாலைக்குள்12வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள் என தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய விலங்கியல் திணைக்களம் நேற்று தனது 87 ஆவது ஆண்டு நீரினை கொண்டாடும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி, நேற்று விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இந்நிகழ்வில் வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். (05)



# பதுளை - பண்டாரவளை பிரதான வீதியில் விபத்து; ஒருவர் இறப்பு

பதுளை - பண்டாரவளை பிரதான வீதியின் ஹாலிஎல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர் என ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

எல்ல ஹல்பே பகுதியில் இருந்து பதுளை நோக்கி சென்றுகொண்டிருந்த காரொன்று ஹாலி எல பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் உள்ள பெரிய மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த 52 வயதுடைய நபர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த இரு பெண்களும் இரண்டு சிறுவர்களும் பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பதுளையில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு சென்றபோது இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# அபிவிருத்திக்குழுக் கூட்ட விவாதங்கள் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டும்

(அகீல்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட, பிரதேச, திணைக்களங்கள் சார்ந்த அபிவிருத்தி வேலைகளுக்கு நிர்வாக ரீதியாக அனுமதி எடுப்பதற்கும், நல்ல

ஆலோசனைகளைப்பெறுவதற்கும் அபிவிருத்திக்கூட்டங்கள்நடத்தப்படுவது முறைமையாகும் அங்கு விவாதங்கள் ஆரோக்கியமானதாகஇருக்கவேண்டும்.

இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் (ஈ.பி.ஆர்.எல்.எப்) இரா.துரைரெத்தினம் கருத்துவெளியிட்டுள்ளார்.இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறிப்பிட்ட வருடங்களாக மக்கள் பிரதிநிதிகளுக்குள் ஏற்பட்டிருக்கின்ற சில கருத்து முரண்பாடுகள் காரணமாக எந்தளவிற்கு அபிவிருத்தி தொடர்பாக

ஆரோக்கியமான முடிவுகள் அபிவிருத்திக் கூட்டங்களில் எட்டப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இந்த வருடம் இம் மாவட்டத்திற்கு எவ்வளவு நிதி புதிய திட்டங்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. என்னென்ன புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த வருடம்

அமுல்படுத்தப்பட வேண்டிய எந்தத் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. ஏந்தத் திட்டங்கள் முரண்பாடுகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதேபோன்று இன்னும் பல விடயங்களுக்கு எவ்வித முடிவுகளும் இல்லாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. புதிய திட்டங்களுக்கு

அனுமதி அளிப்பதும், இந்த ஆண்டுக்கான அனுமதியை வழங்குவதும் கட்டாயத் தேவையாக உள்ளது.

சில மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும், பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களிலும்மக்கள்பிரதிநிதிகளுக்குள்



அபிவிருத்தி கூட்டங்களின் போது

சில மக்கள் பிரதிநிதிகள் முரண்பாடுகள் காரணமாக நடந்து கொள்ளும் முறையென்பதுஎந்தளவிற்குஅபிவிருத்தியில்ஆரோக்கியமானதுஎன்னும்கேள்வி ஊடகங்களை உற்று நோக்குகின்ற சமூகத்திற்கு மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இதேபோல் அபிவிருத்திக் குழு கூட்டங்களில் முடிவுகளை எடுப்பதற்காகவும், அனுமதியைப் பெறுவதற்காகவும், காத்திருந்து பொறுமையுடன்இருக்கும்திணைக்களத் தலைவர்கள் நம்பி வந்து ஏமாந்து போன கசப்பான சில சம்பவங்களும் ஏன் இருக்க முடியாது?

மக்கள் பிரதிநிதிகளுக்குள் விடயங்கள் ஆரோக்கியமானதாக இருந்தாலும், சில முடிவுகளை அனுமதிகளை எடுக்க வேண்டும் என்பதற்காக வரும் அரச நிருவாகிகள் மனக்கசப்புடன் ஏமாந்து போனது வரலாறாகும். இவைகளுக்கு அப்பால்திணைக்களங்களுக்கும்.பிரதேச செயலகங்கள் மட்டத்திலும் முடிவு எடுக்க முடியாமல் மௌனித்துப் போன பல விடயங்கள் உள்ளன.

அபிவிருத்திக் குழு கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளை அமுல்படுத்துவதற்கும், நல்ல ஆலோசனைகளைப் பெறுவதற்கும் வலுச்சேர்ப்பதற்காகவே நடத்தப்படுவதாகும். ஆனால் மாவட்டச் செயலகத்திற்கு முன் வெகுஜனரீதியான போராட்டங்கள் நடத்தப்படுமானால் அத்துறை சார்ந்த

தலைவர்களும், நிர்வாகத்தை நெறிப்படுத்துகின்ற (அனுமதி அளிக்கின்ற) அரச அதிபரும் பொறுப்புக் கூற வேண்டும். இதற்கு வழிகாட்டியாக அபிவிருத்திக் குழு தலைவர்களும் நடந்துகொள்ளவேண்டும். இவைகள் ஏன் நடைபெறவில்லை. இதேவேளை வெகுஜன போராட்டங்களில் பங்கு கொள்ளுகின்ற மக்கள் பிரதிநிதிகள் சிலர் ஆரோக்கியமாக நடந்து கொள்கின்றார்களா? ஆரோக்கியமாக நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பும், கடமைகளும் இருக்க வேண்டும், அப்படி பொறுப்பு இல்லாத மக்கள் பிரதிநிதிகள் அபிவிருத்திக் கூட்டங்களுக்கு சமூகமளிக்காது எடுக்கும் முடிவுகளுக்கு சங்கடங்களை விளைவிக்காது நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்வரும் கால கட்டங்களில் அபிவிருத்தி தொடர்பாக மாவட்ட நலன்கருதி எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பாக ஆரோக்கியமாக நடந்து கொள்ளாத பட்சத்தில் சமூகம் தனது கடமைகளைச் செய்யும் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

அனைவரும் நல்ல வர்கள், ஆரோக்கியமானவர்கள், திறமைசாலிகள், போட்டியில் வெல்லக் கூடியவர்கள், நேர்மையானவர்கள், மக்கள் நலன் கொண்டவர்கள் தங்கள் கடமைகளை செவ்வென நிறைவேற்றக் கூடியவர்கள். எவ்வளவு கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் சமூகம் நலன்சார்ந்து செயற்படக் கூடியவர்கள் என்னும் நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள் என நம்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# பேராதனைப் பல்கலைக்கழகத்தை 2 லட்சம் மக்கள் பார்வையிட்டனர்

பேராதனை பல்கலைக்கழகத்தை பார்வையிடுவதற்கு பொது மக்களுக் சுமார் 2 லட்சம் மக்கள் அங்கு சென்றிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனைபல்கலைக்கழகத்தின்80ஆம் ஆண்டுநிறைவை முன்னிட்டுகடந்த முதலாம் திகதி அதனை பார்வையிடுவதற்கு பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமாவங்ச கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஓட்டோவை பின்னால் எடுக்கும்போது நேர்ந்த விபரீதம்; ஒருவர் உயிரிழப்பு

தம்புள்ளை - கந்தளம வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்று பின்னோக்கிச் செல்ல முற்பட்ட போது பாறையில் இருந்து வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஓட்டோவின் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர் கந்தளம பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

## உள்நாட்டு ....

(இரண்டாம் பக்கத்தொடர்ச்சி)

பணிகளை ஆரம்பித்தோம்.

நான்ஜனாதிபதியாகவும், பிரதமராக தினேஷ் குணவர்தனவும் பொறுப்பேற்றுக் கொண்ட ஆட்சியின்விவசாய அமைச்சராக மஹிந்த அமரவீர தெரிவு செய்யப்பட்டார். விவசாயம் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டும்முடங்கிக்கிடந்தகாலத்திலேயே அவர் அமைச்சுப் பதவியைஏற்றுக்கொண்டார்.

2023 ஆம் ஆண்டு தமிழ், சிங்கள புத்தாண்டுக்குமுன்னதாகநல்லதொரு விளைச்சலை பெற்றுக் கொள்ள முயற்சித்தோம். உணவுப் பாதுகாப்பிற்கான குழுவொன்றையும் நிறுவினோம். ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தோம். எதிர்கட்சியினர் முன்வரவில்லை. இறுதியாக தன்னிறைவான விளைச்சல் கிடைத்த பின்னர் அதிகாரிகள் மக்களுக்கு அரிசியை பகிர்ந்தளித்தனர். அந்த நேரத்தில் தங்களால்பங்களிப்புச்செய்ய முடியாமல் போனமைக்காக எதிர் கட்சி உறுப்பினர்கள் வருத்த மடைந்தனர்.

மேற்படி பணிக்கு அர்ப்பணிப்புடன் பங்களிப்பை வழங்கியஅமைச்சர்மஹிந்த அமரவீரவுக்கும் அவரின் கீழான அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். விவசாயிகளுக்கு அவசியமான உரத்தை விரைந்து பெற்றுக் கொடுக்கும்இயலுமைஎமக்கு கிட்டியது.

அன்று நாம் நாட்டிற்கு வருகின்ற உரம், கப்பலில் இருந்துநேரடியாகவிளைச்சல் நிலத்தை வந்தடையுமென உறுதி கூறினோம். உரம் கிடைத்தவுடன் அவற்றை விவசாயிகளுக்கு வழங்கினோம். அதனால் உணவு பாதுகாப்பினையும் ஏற்படுத்திவிட்டு வறிய மக்களுக்கு சலுகைவழங்கவும்எம்மால் முடிந்தது.

தற்போது நாம் விவசாயத்தை முன்னேற்ற வேண்டியகட்டாயத்தில் இருக்கின்ற அதேநேரம், ஏற்றுமதியை மையப்படுத்திய விவசாயத்தை வலுப்படுத்த வேண்டும். இதுவரையில் நாம் நமக்கு அவசியமானஉணவுஉற்பத்தியினைமாத்திரமேமேற்கொண்டிருந்தோம்.

எதிர்வரும் நாட்களில் உலகத்தின் உணவுத் தேவைக்கு அவசியமான உற்பத்திகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதற்காகவே விவசாயநவீனமயப்படுத்தல் என்ற பாரிய வேலைத்திட்டத்தினை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதேபோல் கால்நடை வளங்களை மேம்படுத்துவதற்கான விரிவான வேலைத்திட்டம் ஒன்றும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இந்நாட்டின் சிறந்த கால்நடைவளநிறுவனமான அம்பேவல நிறுவனம் ரிதீகமவில் தங்களுக்கான பண்ணையொன்றை பெற்றுத்தருமாறு கோரியுள்ளது. அப்பகுதியில் கால்நடைவளங்களைமேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தியாவின் பிரதான நிறுவனங்களில் ஒன்றான 'அமுல்' நிறுவனம் கால்நடை அபிவிருத்திச் சபையுடன் இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. மேலும்சிலநிறுவனங்களும் அதற்காக முன்வந்துள்ளன. வெளிநாடுகளிலிருந்து கால்நடை இறக்குமதி செய்யும் எண்ணம் எமக்கு இல்லை.

அவ்வாறுகொண்டுவரப்பட்ட 25,000 கால்நடைகள் இறந்துவிட்டன. அதனால் மேற்படிபகுதிகளைஅபிவிருத்திச்செய்யும்பணிகளைஅந்த நிறுவனங்களிடத்திலேயே ஒப்படைக்கவுள்ளோம். அதனால் பால் உற்பத்துறை உள்ளிட்ட பல துறைகளை மேம்படுத்த முடியும்.

அதேபோல் முட்டை மற்றும் கோழி இறைச்சி இறக்குமதி செய்யப்படும். அதனைஎம்மால்தனியாகச் செய்ய முடியாது. அதற்காக அரசாங்கம் மற்றும் தனியார் துறை இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்காகவே இவற்றை செய்கிறோம். நாட்டில் நிதி ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். கடந்த செப்டெம்பர் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்துடனான நிறைவேற்றுக்குழுமட்டத்திலானஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டோம். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு 2023 இற்கான வரவுச் செலவுத்திட்ட அறிக்கையை நாடாளுமன்றத்தில்சமர்பித்திருந்தோம்.

அந்தநேரத்தில்வரிகளை அதிகரிக்க வேண்டிய நிலைமைஉருவானது. அப்போதும் எதிர்கட்சிகளை எம்மோடு ஒன்றுபட்டுபயணிக்கமுன்வருமாறு அழைப்புவிடுத்த போது அவர்கள் 'அரசாங்கம் பொய் சொல்கிறது. கைசாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் எவையும் இல்லை.

இந்த பணத்தை பெற்றுக்கொண்டு மோசடி செய்யப்போகிறார்கள்' என்று பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது. இருப்பினும் அதன் பின்னரான ஜனவரி மற்றும்பெப்ரவரிமாதங்களில் நாம் முன்னெடுக்கவிருந்த வேலைத்திட்டங்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் வாயிலாக தடையேற்படுத்த முயற்சித்த போதிலும் நாம் அச்சமின்றி முன்னோக்கிச் சென்றோம்.

இறுதியாகஏப்ரல்மாதத்தில் சர்வதேசநாணயநிதியத்தின் நிதிக்குழு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது. அதற்கான முதன்மை நியதியாக பெரிஸ் சமவாயம், இந்தியா மற்றும் சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டது. அப்போது சீனா அதனை ஏற்றுக் கொள்ளாது என எதிர்கட்சி கூறியது. ஆனால் மார்ச் மாதத்தில் சீனாவும் தனது இணக்கப்பாட்டினை தெரிவித்தது.

பின்னர் இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக உறுதியளித்தோம். அதனை நிறைவேற்றிக்கொள்ள அனைவரையும்ஒத்துழைக்குமாறு கோரினோம். இறுதியாக நாடாளுமன்றத்தில் எதிர் கட்சியும் அதனை ஆதரிக்க வேண்டிய நிலைமை வந்தது. அதன் பின்னர் கடன் வழங்குநர்களுடன் ஆலோசிப்பதற்காக மேற்படி ஒப்பந்தத்தை நான் அதிகாரிகளிடத்தில் சமர்பித்தேன்.

அந்த நேரத்தில் எமது மொத்தக்கடன் 83 பில்லியன் டொலர்களாகியுள்ளது என்பதை மத்திய வங்கி ஆளுநர் கூறியிருந்தார். அது எமது மொத்த தேசிய உற்பத்திக்கு நிகரானதாகும். இன்னும் 10 -15 வருடங்கள் சென்றாலும் அந்த கடனை நிவர்த்திக்கும் இயலுமைஎம்மிடம்இல்லை.

அதனால் வெளிநாட்டு கடன் வழங்குநர்களிடத்தில் எமக்கு 17 பில்லியன் டொலர்கள்கடன் நிவாரணம் அவசியப்படுகிறது என்பதை நாம் தெரியப்படுத்தினோம். அந்த நிவாரணத்தை பெற்றுத்தர முடியாவிடின் மீள் செலுத்துகை காலத்தை நீடித்தல்,வட்டியைகுறைத்தல் ஆகிய விடயங்களில் ஏதேனும் ஒன்றை செய்யுங்கள் என கோரியிருந்தோம்.

அப்போது வெளிநாட்டு கடன்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என்றாலும் உள்நாட்டு கடன் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினர். உள்நாட்டுகடனைகுறைக்காவிட்டாலும் வெளிநாட்டுக் கடனைமீளச்செலுத்தபணம் இருக்கவில்லை. உள்நாட்டு பணத்தின் ஊடாகவே நாம் டொலர்களை கொள்வனவு செய்ய வேண்டியிருந்த காரணத்தினால் உள்நாட்டு கடனையும் குறைக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

அதன் பின்னர் இந்நாட்டின் வங்கிகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றின்மீதுகைவைக்காமல் மேற்படி நகர்வை முன்னெடுக்குமாறு எனது ஆலோசகருக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் அறிவுறுத்தினேன். அதன் பலனாகவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அது அரசியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அல்ல. மாறாக அரசநிதிக்குழுவிற்கு அதிகாரிகளை அழைத்து கோரிய விடயமாகும். அதிகாரிகளும் அந்த யோசனைக்கு இணக்கம் தெரிவித்தனர். இருப்பினும் அந்த ஆரதவு பாராளுமன்றத்தில்கிடைக்கவில்லை. 62 நாடாளுமன்ற உறுப்பினர்கள் யோசனைக்கு எதிராக வாக்களித்தனர்.

முதலாவதாக ஊழியர் சேமலாப நிதியத்தின் மீது கைவைக்க வேண்டாம் என்கிறார்கள். நாம்அதன்மீது கைவைக்கவில்லை. மேலும் நான் ஜனாதிபதியாவதற்கு முன்பாகதே அதற்கான வட்டி வீதம் 10-9சதவீதமாக குறைவடைந்திருந்தது.

நாட்டில் காணப்பட்ட நிலைமையில் 10சதவீத வட்டியை கூட பெற்றுக் கொடுக்க முடியாத நிலையே காணப்பட்டது. எதிர்கட்சிகள் அன்று மேற்படி விடயங்களுக்கு எதிரப்பு தெரிவித்திருக்கவில்லை.

அதேபோல் குறைந்த பட்சம் 9சதவீத வட்டி வழங்கப்பட வேண்டும் என்பதை அமைச்சரவையேதீர்மானித்திருந்தது. நல்லதொரு மேம்பாடுவருகின்றபோது10சதவீத வட்டியைநாம்அறிவிப்போம். ஊழியர் சேமலாபத்தில் நாம் கைவைக்கவில்லை என்பதோடு 9சதவீத வட்டி என்பதுசட்டத்தின் ஊடாகவே உறுதிப்பட்டுள்ளது.

அடுத்தாக 24 சதவீத வட்டி அறவிடப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால்அந்தவட்டிஎதிர்வரும் நாட்களில் குறைவடையும். பணவீக்கம் 9சதவீதத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதும் வட்டி வீதம் 12 - 13 சதவீதமாகவேகாணப்பட்டது. இந்த நேரத்தில் வரி விதிக்க வேண்டிய விதம் பற்றி எதிர்கட்சி கூறுமெனில் அதுபற்றிஅமைச்சரவையில் ஆலோசிக்கநாம்தயாராகவே உள்ளோம்.

மூன்றாவதாக வங்கிகளுக்கு வரி அதிகரிக்கப்படவில்லை என்றும் கூறுகின்றனர். இருப்பினும் எம்மால் வங்கிகளிடத்தில் அதிகளவில் வரியை அறவிட முடியும். ஆனால் அப்போதைய வட்டி வீதம் 12சதவீதமும் காணப்பட்டாலும் 13- 14 சதவீதம் வரையான வட்டியை அறவிட வேண்டிய நிலைமைக்கு வங்கிகள் தள்ளப்படும். அவ்வாறு வட்டி யை அதிகரிக்க இடமளிக்க முடியாது என்பதால் மேற்படி மூன்றுயோசனைகளையும் நான் நிராகரித்துவிட்டடேன்.

எனவே தொடர்ச்சியாக போலியான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு மாறாக அரசாங்கத்தினால் நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும்வேலைத்திட்டங்களுடன் இணைந்துக் கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுக்கிறேன். அவ்வாறு ஒன்றுபடும்பட்சத்தில்நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்திற்குபங்களிப்புச்செய்த பெருமிதத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிட்டும்.

ஆளும் தரப்பில் இருந்தாலும் எதிர் தரப்பில் இருந்தாலும் நாட்டின் அபிவிருத்திக்காகவும்நாட்டு மக்களுக்குச் சலுகைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் ஒன்றுபட்டுச்செயற்படுவோம். அதனை விடுத்து போலியான தர்க்கங்களை முன்வைப்பதால் பயனில்லை. அந்த முயற்சியில் எதிர்க் கட்சிபலதடவைகள்தோற்றுப் போயுள்ளது.

சபாநாயகருடன் கலந்துரையாடி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மேலும் பல பொறுப்பக்களை கையளிக்க நான் தயாராகவே உள்ளேன். தற்போதும் அவர்கள் செயற்குழுக்களில் அங்கத்துவம்வகிக்கின்றனர்.

திர்வரும் நாட்களில் வரவுச்செலவுத்திட்ட அலுவலகம் திறக்கப்படவுள்ளதால்மேலும் பல பொறுப்புக்கள் உருவாகும். அதனால் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள் எதிர்க்கட்சி அந்தஸ்த்துக்குபாதிப்புஏற்பட நாம் இடமளியோம் - என்றார்.

# வெடுக்குநாறி விக்கிரகங்கள் உடைப்பில் வவு. இந்து – பௌத்த சங்கம் நேரடி தொடர்பு

## குற்றஞ்சாட்டுகிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செயற்பாட்டாளர்

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினுடையவிக்கிரஉடைப்புக்கும் இந்து பௌத்த சங்கத்திற்கும் நேரடி சம்மந்தம்: தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர் தவபாலன் குற்றச்சாட்டு

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினுடையவிக்கிரஉடைப்புக்கும் இந்து பௌத்த சங்கத்திற்கும் நேரடி சம்மந்தம் இருப்பதாக நாம் குற்றம் சாட்டுகின்றோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர் எஸ்.தவபாலன் தெரிவித்தார்.




வவுனியாவில் நேற்று மாலை செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் அண்மைக் காலமாக ஓர் அமைப்பு செயற்பட்டு வருகின்றது. அந்த அமைப்பு தொடர்பாக முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்தமைக்காகதிங்கட்கிழமைவவுனியா பொலிஸ்நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குஉட்படுத்தப்பட்டுள்ளேன்.

இந்துபௌத்தசங்கம்என்றபெயரில் அண்மைகாலமாக ஆலயங்களின் திருவிழாக்களில் நிர்வாகத்தினரின் அனுமதியின்றி ஆலயங்களில் பதாதை ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. இந்து பௌத்தசங்கம்என்றுஇயங்கும்அமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியை பின்புலமாக கொண்ட அமைப்பு. குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தின் முன்னால் இருந்த தாகசாந்தி நிலையத்தில் கூட இந்த அமைப்பு தனது பதாகையைப் போட்டிருந்தது.

இதை நான் அவதானித்து எனது முகப்புத்தகத்தில் ஒரு அரசியல் செயற்பாட்டாளராக பொதுமக்களுக்கான பொது பிரச்சனை என்ற அடிப்படையில் எனக்கு இருக்கும் கருத்து சுதந்திரத்திற்கு அமைய முகப்புத்தகத்தில் இந்த இந்து பௌத்த சங்கம் என்கின்ற அமைப்பு தேவையற்றவகையில்தமிழர்களுடைய சைவஆலயங்களில் இந்தபதாதைகளை தொங்க விடுவது பௌத்தமயமாக்கலை ஏற்படுத்துவதற் காகவும், தேவையற்ற வகையில் மதங்களுக்கு இடையில் பிரச்சனையை ஏற்படுத் தவும் என்ற அடிப்படையில் பதிவேற்றியி ருந்தேன்.

அதற்காக இந்த அமைப்பு சார்ந்து இயங்கும் சில நபர்கள் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்திருந்தனர். அதற்கான வாக்குமூலம் பெறப்பட்டது. உண்மையில் இந்த அமைப்பு அண்மைக்காலமாககணிசமானஆலயங்களில் இந்த பதாதைகளை தொங்க விடுவதைக் காண்கின்றோம்.

முற்று முழுதாக தமிழர் தாயகத்தில் ஒரு பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதற்காகதிட்டமிட்டுஇயங்கும் அமைப்பாக குற்றம் சாட்டுகின்றோம். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினுடையவிக்கிரஉடைப்புக்கும் இந்த அமைப்புக்கும் நேரடி சம்மந்தம் இருப்பதாகநாம்குற்றம்சாட்டுகின்றோம்.

இன்றுஆளும்கட்சியாகஇருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஐக்கிய தேசிய கட்சியை பின்புலமாக கொண்டுமிகவிரைவாகஇந்தசெயற்பாடு இடம்பெறுகின்றது. ரணில்ஜனாதிபதியாக பதவியேற்றபின்னர்தான் இது தீவிரமாக நடைபெறுகிறது. பௌத்தமயமாக்கலை செய்வதற்காகவும் மத நல்லிணக்கம் என்ற பெயரில் பௌத்தத்தை முன்னிலைப்படுத்துவதற்காகவே இந்த அமைப்பு செயற்படுகிறது. பொலிசாரின் வாக்குமூலத்திலும் இதனை தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.

வவுனியாவில்வெடிவைத்தகல்லை ஆக்கிரமித்து கச்சல்சமனங்குளம் என்ற பெயரில் புதிய விகாரை அமைக்கப்பட்டுள்ளது. தையிட்டியில் தனியார் காணியில் அடாத்தாக விகாரை கட்டப்பட்டுள்ளது. குருந்தூர் மலையில் நீதிமன்ற தீர்ப்பை மீறி விகாரை கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர் தாயகத்தில் பௌத்த வல்வளைப்பு நடைபெற்று வரும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் பௌத்தமயமாக்கலை செய்ய இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது. வவுனியாவில் பல நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அமைப்பின் ஊடக ஐக்கிய தேசிய கட்சி பௌத்த மயமாக்கலை செய்ய முயல்கிறது. இதனை அனுமதிக்க மாட்டாம். அனுமதிக்கவும் முடியாது. நான் போட்ட பதிவு தொடர்பில் சவாலுக்கு உட்படுத்துகின்றோம். முடியுமானால் நீதிமன்றத்தின் ஊடாக இந்த விடயத்தை கையாளுங்கள். அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். பௌத்தமயமாக்கலுக்கு நாம் ஒரு போதும் துணை போக மாட்டோம் என்பதை பொறுப்பான இயக்கம் என்ற அடிப்படையில் பதிவு செய்கின்றேன் எனத் தெரிவித்தார். 100

## உள்நாட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டோம். மக்களுக்குஅத்தியாவசியபொருட்களைக்கொள்வனவுசெய்வதற்கான செலவினங்களின் அடிப்படையில் கட்டணங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நெருக்கடி நிலையிலும் பணவீக்கத்தை அரசு வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளது. எம்மால் கடனை மீளச் செலுத்த முடியாது என்பதை சர்வதேச நாணய நிதியம் 2020 ஆம் ஆண்டிலேயே அறிவித்தது. தொடர்ச்சியாக அதனை அறிவித்தனர். 2021-04-17 வரை, 203 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் அரசாங்கத்திடம் அதற்கானஇயலுமைஇருக்கவில்லை.

அரசாங்கத்திடம் 20 மில்லியன்அமெரிக்கடொலர்கள் மாத்திரமே இருந்தன. அதனாலேயே நாடு வங்குரோத்து நிலைமை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தியில் 128% சதவீத கடனைநாடுகொண்டுள்ளது. 2032ஆம் ஆண்டளவில் அதனை 95% ஆகக் குறைக்க வேண்டிய சவாலான நிலைமை காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் இலக்குகளை அடைய, கடனை குறைக்க வேண்டும். வருமானத்தில் இருந்து கடனைசெலுத்தும்நிலைக்கு நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமாகும். அதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக்கடன்களையும் மறுசீரமைக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிலிருந்துபெற்ற கடன்களை மறுசீரமைக்க முடியாது. காரணம், மிகக் குறைந்த வட்டியில் நீண்ட கால அடிப்படையில் அவை பெறப்பட்டுள்ளன. அவர்களிடத்தில் பெறப்பட்ட கடன்களை எந்தவொரு தரப்பும் இதுவரையில் தள்ளுபடி செய்ததில்லை.

அவர்கள் கடன் தர மறுக்கும் பட்சத்தில், உலகில் வேறு எந்த தரப்பிடத்திலும் கடன்பெறமுடியாது. மேலும், இந்தியா, ஜப்பான், சீனா மற்றும் பாரிஸ் சமவாயத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகள் எமக்கு கடன் வழங்கியுள்ளன. தற்போது, கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அவர்களுடன் வெற்றிகரமான விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும், அதிக வட்டிவிகிதத்தில்வணிகக்கடன்களை வழங்கியதரப்புக்களும்உள்ளனர். 1997 இல் குறைந்த வருமானம் பெறும் நாடாக விருந்த நாம் மத்திய வருமானம்பெறும்நாடாக உயர்வதற்கே வணிகக்கடன்களை பெற்றுக்கொண்டோம். அதன் பின்னர் குறைந்த வட்டியில் எமக்கு கடன் பெற்றுத் தருவதை நிறுத்திவிட்டனர். அதனாலேயேஅதிகவட்டிக்கு கடன் பெற வேண்டிய நிலைமை உருவானது.

எவ்வாறாயினும்,எமக்கு கடன் வழங்கிய தரப்பினர் கடன்மறுசீரமைப்புக்குஇணக்கம்தெரிவித்துள்ளனர். அந்த நிவாரணத்தைப் பெற்றுக் கொண்டு படுகடனை மீளச் செலுத்தும்நாடாக இலங்கை தனது பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். அதனைச் செய்யத் தவறினால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும்.

மீண்டும்வங்குரோத்து நிலையைஅடைந்துவிடாமல் உள்நாட்டு கடன்களையும் மறுசீரமைக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு, வங்கிகள், ஊழியர்சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்டவைகளின்பங்களிப்பைபெற வேண்டும். அத்தோடு 57 பில்லியன் வங்கி கணக்கு வைப்பாளர்களையும் நாம் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

இதுகடன்மறுசீரமைப்பு முறையாகும். இதற்குள் அரசியல் செயற்பாடுகள் இல்லை. திறைசேரி, மத்திய வங்கி மற்றும் சர்வதேச நிதி ஆலோசகர்களின் பங்களிப்புடனேயே இதற்குரிய யோசனைகள்தயாரிக்கப்படுகின்றன. அது குறித்து பாராளுமன்றத்திலும்அதற்கு வெளியிலும் உண்மைக்கு புறம்பான பிரசாரங்களை முன்வைப்பது நல்லதல்ல.

கடந்த வருடம் வரலாற்றில் அதிக வங்கி வட்டி விகிதம் பதிவான வருடமாக காணப்பட்டது. 30%-36% ஆக வட்டி விகிதம் உயர்வடைந்திருந்தது. ஆனால் தற்போது திறைசேரி பத்திரங்களுக்கான வட்டி விகிதம் 16% ஆககாணப்படுகின்றது.

வங்கி வட்டி 29சதவீதம் முதல் 16-17சதவீதம் வரை குறைவடைந்துவருகின்றது. இவ்வருட இறுதிக்குள் 11-12 சதவீதமாககுறையலாம். இது குறித்து பல தரப்புக்களும் தவறான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர். தொடர்ச்சியாக மறுசீரமைப்புச் செயற்பாடுகளைசெய்யாமல் இருக்கும் பட்சத்தில் பணவீக்கம் அதிகரிக்கும். முதலீட்டாளர்களும்நாட்டிற்கு வரத் தயங்குவர்.

நாட்டின் வங்கி கட்டமைப்பு முழுமையாக சரிவடையும் என பலரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டுள்ளனர். நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் சர்வதேசரீதியில் பாராட்டைப் பெற்றுள்ளது. தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் முதலீட்டாளர்களுக்குச்சாதகமான சூழலுக்கானவாய்ப்புகளைஉருவாக்கும் பட்சத்தில் உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்யத்தயாராக உள்ளனர்.

அண்மையில் நான் மேற்கொண்டசீனவிஜயத்தின் போது, அந்நாட்டின் நிதி அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் சீன எக்ஸிம் வங்கியின் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடினேன். இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும்முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு அவர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

அத்துடன், சைனா ஹார்பர் பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில்,கொழும்புதுறைமுக நகரத்தில் 1.2 பில்லியன் டொலர்களைமுதலீடுசெய்யத் தயாராக இருப்பதாகவும் , சீனாவின் சினோபெக் நிறுவனம், எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமொன்றை இலங்கையில் ஆரம்பிக்க உள்ளதெனவும்தெரிவித்தார்.

அது மட்டுமன்றி கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்த இலங்கை அந்த சவால்களுக்குவெற்றிகரமாகமுகம் கொடுத்து, சுமூகமான நிலைமைக்குதிரும்பிக்கொண்டிருக்கிறதென ஜூன் 20 ஆம் திகதி வெளியான புளூம் போர்ட் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.'- என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்
076 443 80 22




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.07.2023இல் வெளியிடப்பெற்றது.